215

தொகுதி 11.] 1932ஞு பிப்ருவரிமீ [பகுதி 1.

12 APR 1932

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
ஞா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 5-பாகம் விலை ரூபா 10-0-0

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

# ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# இரத்தினபுரி இரகசியம்

## (6-ம் பாகம்)

ஓர் இனிய தமிழ் நாவல்

12 APR 1932

ஸ்ரீமான்

ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள்

எழுதியது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18656
சென்னை-600 008

"ஆனந்த போதினி" பத்திராதிபா

நா. முனிசாமி முதலியார் அவர்களால்

வெளியிடப்பெற்றது.

1932

காபிரைட் ரிஜிஸ்தர்]

[விலை ரூபா **1-10-0.**

இவ்வாறு கூறியதும் அவள் திடீரென்று விஷய உணர்ச்சியை யடைந்து தான் இருக்குமிடத்தில் நான்கு பக்கத்திலும் பார்த்து அந்த இடத்தைத்தான் முன் பின் பார்த்ததில்லையென்பதை உணர்ந்து, "அம்மா! இந்த இடமும் இந்த இடத்திலுள்ள நீங்களும் எனக்குப் புதியவர்களாகவே இருக்கிறீர்கள் ஆதலால் நான் எங்கே இருக்கிறேன். நீங்கள் யார் என்னும் விஷயத்தை உடனே என்னிடம் தெரிவித்துவிடு" என்று பரிவுடன் கேட்டாள்.

அதற்கு காமாட்சி, "பெண்மணியே! என் பெயர் காமாட்சி என்று முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா? இதுதான் என் வீடு. இங்கு நீ சௌக்கியமாக இருக்கலாம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அச்சப்படவேண்டாம். சந்தோஷமாக இரு" என்றாள். அப்போது ஜகதீஸ்வரி மிக்க அடக்க ஒடுக்கத்துடன், 'இங்கு சுகமேது? நான் ஒரு கைதியைப்போலத்தானே இங்கு இருக்கவேண்டியதாக இருக்கும். எனினும் உங்கள் இருவரையும் பார்த்தால் பணக்காரிகளைப்போலவும், உயர்குலத்தையே சேர்ந்தவர்களைப் போலவும், காணப்படுவதால் உங்களால் எனக்கு அபாய மொன்றும் ஏற்படாதென்றே நான் நினைக்கிறேன். ஆயினும் நான் இங்கு இருக்கவேண்டிய அவசியமென்ன என்பதை நினைக்கும்போதுதான் உங்களுடைய யோக்கியதையில் எனக்குச் சந்தேகமுண்டாகிறது. ஆதலின் விஷயத்தைச் சொல்லிவிடுங்கள்" என்றாள்.

இவ்வாறு அவள் கேட்டதும் அவளுக்கு ஏதோ ஒரு விதமான எண்ணம் உண்டாயிற்று.உடனே திடீரென்று அடிபட்டவள்போல் மூர்ச்சையானாள். இதைக்கண்ட காமாட்சியும், தனமும் அவளைப் பிடிக்கப்போனார்கள். ஆனால் அவள், "இல்லை, இல்லை. தொடாதீர்கள். தூர இருங்கள்.

என்னைப் பைத்தியக்காரி என்று நினைத்துக்கொண்டுவிட்டீர்கள் போலும்! என்று கூறிக்கொண்டே அங்கிருந்த சோபாவின்மீது விழுந்து புரண்டு ஓவென்று அழுதாள். அப்போது அதைக்கண்ட காமாட்சியும், தனமும் ஜகதீஸ்வரியின் நிலையைப்பார்த்துப் பரஸ்பரம் ஒருவர் முகத்தை மற்றவர் கண்டனர்.

இதற்குள் ஜகதீஸ்வரி மீண்டும் புத்தி சுவாதீனமற்றவள்போல் உரத்தகுரலில், "ஓ! இப்போது நான் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டுவிட்டேன். புதிய மனிதர்கள் திடீரென்று இராக்காலங்களில் வேறு மனிதர்களைப் பிடித்து வண்டியில் தூக்கிப்போட்டு பைத்தியக்கார விடுதிக்கு எடுத்துச் செல்கிறார்களென்று நான் புஸ்தகங்களில் படித்திருக்கிறேன். அப்படியும் நான் பைத்தியக்காரியல்லவே. எனதன்புள்ள மாதே என்னை நம்பு" என்று கூறிக்கொண்டே காமாட்சியின்முன் முழங்காலிட்டுப் பணிந்த வண்ணம், "நான் பைத்தியக்காரியல்ல. ஐயோ கடவுளே! என்னை அவ்வளவு அன்புடன் வளர்த்த என் சிறிய தாயாரும் அவளது புருஷனும், என்னை அவ்வளவு அதிகமாக நேசிக்கும் மதுரைநாயகம்பிரபுவும் நான் இப்படியும் இவ்வளவு கொடுமையான பைத்தியக்கார விடுதியில் அடைபடுவதைச் சகிப்பார்களோ? சிற்சில சமயங்களில் நான் ஏதோ சில நூதன எண்ணங்களை நினைத்தும், அதை வெளியிட்டுச் சொல்லியும் இருக்கலாம். ஆனால் நான் பைத்தியக்காரியல்ல என்பது மட்டும் நிச்சயம்" என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டாள்.

அதைக்கண்ட காமாட்சியம்மாள் மிக்க சமாதானத்துடனும் அன்பான தோரணையிலும், "அன்புள்ள குழந்தாய்! எழுந்திரு. என்னுடைய யோசனையைக் கேள்.

களைப்பை ஆற்றிக்கொள். எதற்கும் ஆயாசப்படவேண்டாம். நன்றாக மெய்மறந்து தூங்க முயற்சிசெய். நாளையதினம் நாமெல்லாம் கூடிச் சில விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டியதாயிருக்கிறது. உனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமோ என்று கனவிலும் கருதவேண்டாம்'' என்று சமாதானம் கூறித் தேற்றினாள்.

காமாட்சி இவ்வாறு தேற்றியதைக் கண்டதும், கண்டோர் மனம் கலங்கத்தக்க வகையில், வாலிபமும் அழகும் கபடமற்றதன்மையும் மிக்க ஜகதீஸ்வரி கவலை முகத்துடனும் அழுகைக் குரலுடனும், "சரி, அப்படியானால் நான் உன் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே வருத்தத்துடனும் மெதுவாகவும் எழுந்தாள். அப்போது தனம் அவளைப் படுக்கையறைக்கு அழைத்துச்செல்ல முன்வந்ததால் ஜகதீஸ்வரியும் அவள் பின்னாலேயே ஒருநடைப் பிணம்போல் ஏதும் தோன்றாமல் நடந்து சென்றாள். அவள் மாடிமீது மிக நன்றாக அலங்கரிக்கப்பட்ட அறை ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்குபோய்ச் சேர்ந்தபின்னர் ஜகதீஸ்வரி தனியாகப் படுத்துக்கொள்வாளா அல்லது ஏதேனும் வேலைக்காரியின் துணைவேண்டுமா என்று தனம் விசாரித்தாள். அதற்கு ஜகதீஸ்வரி, 'தனியே' என்னும் ஒரு பதத்தைத்தான் மறுமொழியாகக் கூறினாள். பிறகு தனம் அவளுக்கு வந்தனம் செலுத்திவிட்டு அவ்வறையினின்றும் புறப்பட்டாள்.

மிக நன்றாக அலங்கரிக்கப்பட்ட அவ்வறையில் தன்னந்தனியே இருந்த ஜகதீஸ்வரி, வாசனைத் திரவியங்கள் வைக்கப்பட்டிருந்த மேஜையின் அருகில் உட்கார்ந்துகொண்டாள். அவள் ஓய் வெடுத்துக்கொள்ளவோ, களைப்பாறவோ எத்தகைய முயற்சியும் செய்யாமல் பற்பலவிதமான விஷயங்

களைப்பற்றிச் சிந்திக்கும்பொருட்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கிவிட்டாள். தனது பிறப்பு வளர்ப்புமுதல் எதை எதையோ எல்லாம் சிந்தித்தாள். தான் சென்ற சில மாதங்களில் கவலையின் மிகுதியால் வாயால் உளறியதைப்பற்றியெல்லாம் நினைத்தாள். இறந்துபோன தன் தாயின் குற்றங்களும் பரிதாப நிலைமையும் ஞாபகத்துக்கு வந்தது. அம்மாதை ஏமாற்றியவர்களை மனதிலேயே திட்டினாள். தன் தாய்க்கு நேர்ந்ததுபோன்ற அபாயமே தனக்கும் நேரலாமல்லவா என்று எண்ணினாள். இவ்வாறெல்லாம் பலமுறை எண்ணியதாலும் பேசியதாலுமே தன்னைப் பைத்தியக்காரி என மற்றவர்கள் நினைத்துவிட்டார்களோ எனச் சந்தேகித்தாள்.

பிறகு அவள் தன் முழங்கையை அம்மேஜைமீது வைத்து சாய்ந்தவண்ணம் ஆடாமலும் அசையாமலும் தன் கையால் நெற்றியைப் பிடித்துக்கொண்டு மீண்டும் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கலானாள். உண்மையிலேயே தனக்கு மனத்தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறதா அல்லது தன்னுடைய பந்துமித்திரர்கள் தவறுதலாகத் தன்னைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்களா என்று நினைப்பதிலேயே அவள் பொழுதெல்லாம் கழிந்தது. இவ்வாறு தன்னைப்பற்றி அவள் நினைத்துக்கொண்டதாலேயே உண்மையில் அவளது மூளையில் கலக்கம் ஏற்பட்டு அவள் மனத்தடுமாற்றம் அடைந்தாள்.

சிறிதுநேரத்துக்குப் பிறகு திடீரென்று தன் கைகளைப் பிசைந்துகொண்டே ஓவென்று வாய்விட்டலறி அழ ஆரம்பித்தாள். அப்போது உரத்தசத்தத்தில், "ஓ! மதுரைநாயகம் பிரபுவே! எனது காதலனே! நீயுமா என்னைப் பைத்தியக்காரி என்று நினைத்துவிட்டாய்? என்னை இங்கு கொண்டு

வந்ததற்கு நீயும் மற்றவர்களைப்போலவே சம்மதித்திருக்க வேண்டும் என்று கருதுகிறேன்" என்று கதறினாள். பிறகு நீண்ட நேரத்துக்குப்பின் பலவிதமான உணர்ச்சிகளால் தாக்கப்பெற்று சோர்ந்துபோனபடியால் அவள் தனக்கும் தெரியாமலே ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பினாள். தன்மீதிருந்த அதிகப்படியான ஆடைகளை அப்புறப்படுத்தி வைத்துவிட்டு அங்கிருந்த படுக்கையில் படுத்தாள். அவள் மனமும் தேகமும் அலைச்சலினால் சோர்வுற்றிருந்ததால் படுத்துச் சொற்ப நேரத்துக்குள் மெய்மறந்து ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிவிட்டாள்.

மறுநாள் காலை அவள் எழுந்ததும், முன்னாள் இரவு நடந்தவைகளை ஞாபகப்படுத்திக்கொள்ளவே அவளுக்குத் தான் நினைத்ததே சரி என்று தோன்றிவிட்டது. அதாவது தன்னைப் பைத்தியக்காரி எனத் தன் பந்துமித்திரர்கள் நினைத்து இவ்வாறு இங்கே கொண்டுவந்து அடைத்துவிட்டிருக்கிறார்கள் என்று நிச்சயமாக நினைத்தாள். தான் இப்போது இருக்குமிடத்தில் தனக்கு ஏதேனு மபாயமோ அல்லது கேவலமாக நடத்தப்படுவதோ நேராது என நிச்சயமாக நம்பினாள். ஆயினும் அவ்விடத்தைவிட்டுத் தன் சிறிய தாயாரின் மாளிகைக்கே உடனே போய்விடவேண்டுமென்னும் ஆசையே அவளை ஒவ்வொரு நிமிஷமும் தூண்டிற்று. அங்கேதான் அவள் உண்மையில் நேசிக்கும் பந்துக்களும் அவளைப் பரம விசுவாசத்துடன் காதலிக்கும் அன்பனும் இருப்பதால் அங்குதான் தனக்கு மனத்திருப்தி ஏற்படும் என்று கருதி உடனே அவ்விடம் செல்லவிரும்பினாள். ஆனால் அங்குபோய்ச் சேர்வதெப்படி என்பதுதான் ஒரு பெரிய விசாரமாயிருந்தது. ஆயினும் தான் இப்போது அங்கு இருப்பதற்குக் காரணம் தன் மனத்தடுமாற்றமே

என்று அவள் நிச்சயமாக நம்பியதால் இத்தடுமாற்றத்தை ஒழித்துக்கொண்டு மன அமைதியுடன் நிம்மதியாக இருந்தால்தான் அவள் மீண்டும் தனது சிறிய தாயின் வீட்டுக்குச் செல்லமுடியும் என்று கருதினாள். ஆகவே அவள் இனி தன் எண்ணத்திலும், பேச்சிலும் மிதமாக இருந்து அதிக மன அமைதியுடையவள்போல் நடந்துகொள்ள முயற்சித்தாள். அதாவது அங்குள்ளவர்கள், அவள் மனத்தடுமாற்றத்தினின்றும் சொஸ்தமடைந்துவிட்டாள் என்று நினைக்கும்படி நடந்துகொள்வதென முடிவுசெய்து அவ்வாறே நடக்கவும் ஒவ்வொரு நிமிஷமும் பிரயத்தனம் செய்தாள். இவ்வாறாக ஜகதீஸ்வரி, பாவம், தான் மூளைகலங்கிய பைத்தியக்காரியே என்றும், தான் மன அமைதியை அடையும் பொருட்டு முயற்சி செய்யவேண்டுமென்றும் உண்மையில் நினைத்தாள்.

அவளை, வேறு கெட்ட நோக்கத்துடன் இவ்வாறு பலாத்காரமாகக் கொண்டுவந்து சில அயோக்கியர்கள் அடைத்து வைத்திருக்கின்றனர் என்பதை அறியமுடியாத கள்ளங்கபடமற்ற உத்தமியாகிய ஜகதீஸ்வரி, தன்னைப் பைத்தியக்காரி என்று தன் பந்துமித்திரர்கள் நினைத்தே அங்கு அடைத்து வைத்திருக்கிறார்களென்று நிச்சயமாக நம்பினாளென்றாலும் அதற்காக அவள் தன் சிறிய தாயையோ அவாது கணவனையோ அல்லது தன் மனத்துக்கேற்ற காதலனை மதுரை நாயகத்தையோ நொந்து கொள்ளவுமில்லை, வெறுக்கவுமில்லை. அவர்கள், தன்னுடைய நிலைமையில் தன் நன்மைக்காகவே எதை நியாயமாகச் செய்யவேண்டுமோ அதையே செய்திருக்கிறார்கள் என்று நினைத்தாள். ஆகவே அவளுக்கு அவர்களிடம் இன்னும் அன்பும் விசுவாசமும் அதிகரித்தது. அவர்களுடைய உருவங்களைத்

தன் மனக்கண்ணுல் நோக்கினுள். தன்னுடைய நன்மையைக் கருதிய அவர்களுக்கு எல்லாம்வல்ல இறைவன் சகலவிதங்களிலும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்தாள்.

ஜகதீஸ்வரி காலையில் எழுந்ததும் இவ்வாறெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தபோது மிக ஒழுங்காக ஆடையணிந்த, சுறுசுறுப்பான சுபாவமுள்ள ஒருமாது தன்னை நோக்கி அவ்வறையில் வருவதைக்கண்டாள். அம்மாதும் அவள் சமீபத்தில் வந்து, ஜகதீஸ்வரியுடன் அவளுக்குத் துணையாக இருப்பதற்காகத்தான் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்துக்கொண்டாள். ஜகதீஸ்வரியும் அம்மாதை மிக மரியாதையுடனும் அன்புடனும் வரவேற்று அவளது துணையையும் வேலையையும் ஏற்றுக்கொண்டாள். சாதாரணமாகவே நமது ஜகதீஸ்வரி தனது வேலைக்காரிகளிடம் மரியாதையுடனும் அன்புடனும் நடந்துகொள்வது வழக்கம். எப்போதுமே பரம்பரையாகவே செல்வந்தர்களாய் இருப்பவர்கள் தங்களுக்குள்ள செல்வத்தைக்கண்டு கர்வமோ பெருமையோ யடையாமல் மற்றவர்களுடனும், முக்கியமாகத் தங்கள் வேலைக்காரர்களுடனும் மரியாதையாகவே நடந்து கொள்வார்கள். ஆனல் 'அற்பனுக்கு ஐசுவரியம் வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்'' என்பதுபோலச் சில ஏழைகளுக்கு அதிர்ஷ்டவசமாகச் செல்வம் கிடைத்துவிடுமாயின் தலைகால் தெரியாமல் துள்ளுவார்கள். தங்களைப் போன்ற மனிதர்களை மிகக் கேவலமாக மதித்து நடத்துவார்கள். எனினும் ஏழையாயினும் கல்வியிற்சிறந்த நற்குண நல்லொழுக்கங்களோடு கூடியவரிடம் செல்வம் சேர்ந்தால் அவர்கள் தவறான முறையில் செல்லமாட்டார்கள். செல்வ நிலையில் உயர்வு தாழ்வு சம்பந்தமாக ஏற்படும் நிகழ்ச்சிகளைப்

பற்றிக் கூறினேம். இப்போது ஜாதி வித்தியாசத்தால் ஏற்படும் உயர்வு தாழ்வில் காணப்படும் அக்கிரமங்களைப்பற்றிச் சிறிது கூறவிரும்புகிறேம். உயர் ஜாதியினர், தங்கள் வீடுகளில் வேலைசெய்வதற்காகத் தாழ்ந்த ஜாதியினரெனப்படும் மாதர்களையோ ஆடவர்களையோ அமர்த்திக்கொள்கிறார்கள். இது நமது நாட்டில் சகஜமாயிருக்கிறது. ஆனல் கல்வி யறிவுள்ளவர்களும், பெருந்தன்மையாக நடந்துகொள்ளத் தெரிந்தவர்களும்,சமத்துவ உணர்ச்சி உள்ளவர்களுமான மிகச்சிலர் மட்டுமே அந்த தாழ்ந்தஜாதி வேலைக்காரர்களைப் பெருந்தன்மையுடன் நடத்துகின்றனர். மிகப் பெரும்பான்மையோரான மற்றவர்கள் இழிவாகவே நடத்துகின்றனர் எனக் கூற வேண்டி யிருப்பதற்காக வருத்தமடையாம லிருக்கமுடியவில்லை. மிக்க வயதுசென்ற ஆடவரும் மாதருமான தாழ்ந்த ஜாதியினரெனப்படும் வேலைக்காரர்களை உயர் ஜாதியினரான சிறு பெண்களும், பிள்ளைகளும்கூட மிகக் கேவலமாக அடே என்றும் அடி என்றும் அழைத்து இன்னும் பலவிதங்களில் தாழ்மையுடன் ஜாதி அகம்பாவம் காரணமாக நடத்துவதும் வருந்தத்தக்க விஷயமாகும். இவ்வாருக ஜாதி காரணமாகவோ, பொருளாதாரநிலை காரணமாகவோ ஒருவரை மற்றொருவர் கேவலமாகவும் மரியாதையின்றியும் நடத்தும் முறை ஒழியவேண்டும். இலை மறைகாயென ஒரு சிலர் பெருந்தன்மையுடன் நடந்துகொள்பவர்களைப் பாராட்டாமலிருக்கமுடியாது. நமது ஜகதீஸ்வரியும் அப்படிப்பட்டவர்களில் ஒருத்தி.

ஜகதீஸ்வரி, தனக்குத் துணையாகவந்த அம்மாதினிடம் நடந்துகொண்ட மாதிரியைக்கண்டு அம்மாதே ஆச்சரியமும் திருப்தியும் அடைந்தாள். மேலும் ஜகதீஸ்வரி தனக்கு நிகழ்ந்ததையெல்லாம் மறந்துவிட்டவள்போல் மன நிம்மதியுடன் இருப்பதைக்கண்டும் பிரமித்தாள். அம்மாது ஜக

தீஸ்வரிக்குத் தலைவாரி பின்னல் போட்டு முகங்கழுவி வாச னைப்பொடி தூவியதும் காமாட்சியம்மாளும் அங்கேவந்து சேர்ந்தாள். அவள் ஜகதீஸ்வரியைத் தழுவிக்கொண்டு, அவ் வளவு விரைவில் மன அமைதி ஏற்படுத்திக்கொண்டதற்காக வும், பார்வைக்கு ரம்மியமாகத் தோன்றுவதாலும் தனக்கு மிகவும் சந்தோஷமாக இருப்பதாகவும் தெரிவித்தாள். இதைக்கண்ட ஜகதீஸ்வரி புன்னகைபுரிந்து, உதவிக்கு ஏற் படுத்திக் கொடுத்திருக்கும் சௌகரியத்தைக் கண்டு சந் தோஷப்படுவதாகவும் அதற்காக வந்தனம் செலுத்துவதாக வும் கூறினள். பிறகு காமாட்சியம்மாள் அவளைக் கீழே உள்ள காலை ஆகார அறைக்கு அழைத்துச்சென்றுள். அங்கு ஜகதீஸ்வரி மிக உபாயமாகவே ஆகாரத்தை எடுத்துக்கொண் டாள் என்றாலும் அவள் மிக்க உற்சாக முடையவள் போலும், பெரும்பாலும் கவலையை யொழித்தவள்போலும் காணப்பட்டாள். மேலும் ஜகதீஸ்வரி காமாட்சியம்மாளிடம் அன்புகலந்த மரியாதையுடன் நடந்துகொண்டாள்.

இதற்கிடையில் நாம் அம்மாளிகையின் அமைப்பைப் பற்றிச் சிறிது விளக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இரத்தினபுரியிலுள்ள பெரிய நிலச்சுவான்தார்கள் வருஷத் தில் சிற்சில மாதங்களில் தங்கள் நிலங்களுள்ள கிராமங்களுக் குச் சென்று தங்குவதற்காக அக்கிராமங்களில் தங்கள் நகர வாழ்க்கைக்கேற்ப மாளிகைகளை அமைத்திருந்தனர். அப் படிப்பட்ட மாளிகையில் இதுவும் ஒன்று. காமாட்சியம்மாள், தனம் ஆகியோர் சம்பந்தப்பட்ட யாரேனும் மிக்க செல்வரா யிருந்து இப்படிப்பட்ட மாளிகையைத் தங்கள் சௌகரியத் துக்காகக் கட்டியிருக்கலாம். அதில்தான் காமாட்சியும் தன மும் கள்ளங்கபடமற்ற ஜகதீஸ்வரியைப் பலாத்காரமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். இரத்தினபுரி போன்ற நக

ரங்களில் காணப்படும் தடபுடல்கள் ஒன்றும் அங்கு காணப் படவில்லையென்றாலும், கூடியவரையில் கிராமப்புறங்களிலும் நகரவாழ்க்கையை அனுஷ்டிக்கவேண்டிய சௌகரியங்கள் அம்மாளிகைகளில் அமைக்கப்பட்டிருக்கும். ஆகவே அம் மாளிகையில் உள்ளவர்கள் நகரங்களில் இருப்பதைப்போல் கருதுவார்களே யொழிய கிராமத்திலிருப்பதாக நினைக்க மாட்டார்கள். அம்மாளிகையிலுள்ள ஹால், மாடிப்படிக் கட்டுகள், சில அறைகள் எல்லாம் நவீன முறையின்படி சலவைக்கற்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அங்கு தரை மீது ரத்னக்கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. கடைசி அடுக்கு மட்டும் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு நோக்கச் செல்லக்கூடியவகையில் தொடர்ச்சியாக அறைகள் பல அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் அம்மாளிகையில் பெரும் பான்மையான இடங்கள் ஆங்காங்கு இருக்கவேண்டிய சாமான்கள் இல்லாமல் காலியாகவே இருந்தன. அதுமட்டு மன்றி பல அறைகள் நீண்டகாலமாகப் பூட்டப்பட்டுமிருந் தன. அம்மாளிகையின் அமைப்பைப்பற்றி விளக்கியபின் நமது கதையைத்தொடர்ந்து செல்வோம்.

இங்கு நமது ஜகதீஸ்வரியின் நிலைமையிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கிய படிப்பினை ஒன்று இருப் பதை எளிதில் விட்டுவிடுவதற்கில்லை. மனக் கலக்கத்துக்கு இடங்கொடுக்கலாகாது என்று நமது பெரியோர்கள் கூறி யிருக்கின்றனர். எக்காரணத்தைக் கொண்டேனும் ஏதே னும் கவலை தோன்றுமாயின் உடனே அதை மறந்து ஒரு வாறு மனதைத் தேற்றிக்கொண்டு இதர விஷயங்களில் மனதை உற்சாகத்துடன்செலுத்தி அக்கவலையை யொழித்து விடவேண்டும். இன்றேல் மனக்கலக்கமே காரணமாயிருந்து மூளை புரண்டு பைத்தியக்காரர்களைப்போ லாய்விடக்கூடும்.

உண்மையில் பைத்தியக்காரராக இல்லாவிட்டாலும் தங்களைத் தாங்களே பைத்தியக்காரர்களோ என்று சந்தேகிக்கும்படியான நிலைமையும் ஏற்பட்டுவிடுகிறது. ஜகதீஸ்வரி பைத்தியக்காரியாக இல்லாமலிருந்தும் தன் மனக்கவலைக்கு அதிக இடம் கொடுத்துவிட்டதன்காரணமாக அவள் இப்போது தான் பைத்தியக்காரியாகவே இருக்கவேண்டுமென்று உண்மையில் நம்புகிறாள். ஆகவே உலக விஷயங்களில் தாமரை இலைத் தண்ணீர்போல் பற்றற்றவர்களாயிருந்து சதாகாலமும் மனதை எம்பெருமானிடம் செலுத்தி மன நிம்மதியான வாழ்க்கையை நடத்திவரவேண்டியது மானிடர்களாகிய நமது கடமையாகும்.

## 184 - வது அத்தியாயம்

ஜகதீஸ்வரியை பலாத்காரமாகத் தூக்கிச் சென்று நாம் மேலேகுறிப்பிட்ட மாளிகையில் அடைத்து வைத்து ஏழுநாட்கள் கழிந்துவிட்டன. இக் காலவரையறைக்குள் ஜகதீஸ்வரி அம்மாளிகையில் பெற்ற அனுபவங்களினாலும், கண்ட பல நிகழ்ச்சிகளாலும், நடந்த சில சம்பவங்களாலும் தன்னை அங்கு ஏன் அடைத்துவைத்திருக்கிறார்கள் என்பதை ஒருவாறு யூகித்து அறிந்துகொண்டாள். அப்போது அவளுக்கு மீண்டும் பழைய ஞாபகங்கள் நினைவுக்குவந்தன. தன் தாய் இளவரசருடன் சம்பந்தம் வைத்துக்கொண்டதுபற்றியும் நினைத்தாள். அப்போதுதான் அவளுக்கு எத்தகைய கவலையுமின்றி நிம்மதியுடன் இருந்த காலமும் பிறகு இளவரசர், தன் தாயுடன் சம்பந்தம் வைத்துக்கொண்ட தன் தந்தை அவளுக்குத் தெரியவே மனக்கவலை ஏற்பட்டதும் அவளுக்கு மீண்டும் கலக்கத்தை உண்

டாக்கின. அக்காலத்தில் அவள் தனக்குள், "என் தந்தை இளவரசரைப்பற்றி எனக்குத் தெரிந்திராவிட்டால் இக்கவலையே எனக்கு ஏற்பட்டிராது" என்று அடிக்கடி சொல்லிக் கொள்வாள். இவ்வாறு சதாகாலமும் நினைத்துக்கொண்டிருந்தபடியால் அவளுக்கு தன் தந்தை என்னும் மாத்திரத்தில் ஒருவித வெறுப்பும், ஆத்திரமும் உண்டாயிற்று. இதை அவள் பலமுறை தன் காதலனான மதுரைநாயகத்தினிடமும் கூறியிருக்கிறாளென்பதை வாசகநேயர்கள் அறிவார்கள். தன் தந்தை என்று அவரிடம் அவளுக்கு எவ்விதமான அன்பும் மரியாதையும் ஏற்படவில்லையென்று அவள் அனேக தடவைகளில் கூறியிருக்கிறாள். இப்போது அடைபட்ட மாளிகையில் அதைப்பற்றி அதிகம் நினைத்ததால் அவளுக்குத் தந்தையாகிய இளவரசரின் உருவத்தை மனக்கண்ணால் பார்த்தாலும் வெறுப்பும் கோபமுமே அதிகரித்தது. அவள் இயற்கையிலேயே பெருந் தன்மையும் நற்குண நல்லொழுக்கமு முடையவளாதலால் ஒருவர்மீது இவ்வாறு வெறுப்பும் கோபமும்கொள்ள அவள் விரும்பாததால் இளவரசர் விஷயமாய்த் தனக்கு ஏற்பட்ட அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள அவள் அரும்பாடுபட்டாள். ஆனால் அவளால் அடக்கமுடியாத அவ்வளவு அதிகமான வெறுப்பு அவளுக்கு ஏற்பட்டுவிட்டிருந்தபடியால் தனது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள அவளால் முடியவில்லை. இவ்வாறு அவள் இருக்கும் நிலைமையில் நாளடைவில் அவளுடைய மனப்பான்மையில் எத்தகைய மாறுதல் ஏற்படுகிறதென்பதைப் பின்னால் நாம் அறியப்போகிறோம்.

தனியாக தனக்கு முன்பின் தெரியாதவர்கள் நிரம்பிய ஒரு புதிய இடத்தில் சிக்கிக்கொண்ட ஜகதீஸ்வரி பின்வருமாறு அடிக்கடி நினைப்பதுண்டு. "எனக்கு ஏதோ கெட்ட

காலம் ஏற்பட்டிருக்கிறதென்பதை மறைத்து வைத்துக் கொள்ள என்னால் முடியவில்லை. என்னுடைய பிறப்பு சம்பந்தமான இரகசியம் நீண்டகாலம்வரை எனக்குத் தெரியாமலிருந்தும் பிறகு அது எனக்குத் தெரியும்படி ஏன் ஏற்படவேண்டும்? நான் சிறு குழந்தையாக இருந்தபோதும், பிறகு சிறு பெண்ணாக இருந்தபோதும் உலக விவகாரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லாமல் அறியாமையுடன் இருந்து இன்பங்களையே அனுபவித்து வந்தேன். அப்போதெல்லாம் என் பிறப்பு சம்பந்தமான இரகசியமும் வெளிப்படாமலும், வெளிப்படுவதற்கு சமயமேற்படாமலும் இருந்தது. ஆனால் நான் நல்ல பிராயம் அடைந்ததும் என் விஷயங்களெல்லாம் வெளியாகவேண்டிய காலம் வந்துவிட்டது. மர்மங்களனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாகத்தானே என் கண்ணில் புலப்பட்டுவிட்டது. ஆகவே நான் என் தந்தையாரான இளவாசரை என்று பார்த்தேனோ அன்றும், என் காதலனாகிய மதுரைநாயகம் பிரபுவை என்று கண்டேனோ அன்றுமே என் கண்களைத் திறந்த நாளாகும். ஏனெனின், நான் இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்கும்படி என் காதலனிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டு அதற்கிணங்க அவன் முயற்சி செய்திராவிட்டால், என் சிறிய தாயாரோ அல்லது அவள் கணவரோ இவ்விஷயத்தைச் சொல்லியிருக்கவே மாட்டார்கள். பிறகு நான் கண்டுபிடித்த விஷயம்தான் என்ன? இளவாசரைக் கண்டதுமுதல் அவரிடம் எனக்குத் தெரியாமலே ஒருவகையான வாஞ்சையும், அனுதாபமும் ஏற்பட்டிருந்தது. ஆனால், என் தாயார் மானத்தையும், இன்பத்தையும் இழந்து அகால மரணத்தை அடைந்ததற்கும் அந்த இளவாசரே காரணம் என்று தெரிந்ததும் அந்த அபிமானமெல்லாம் மறைந்துவிட்டது. இதனால் என் தந்தையாகிய அவரை நேசிக்க நான் விரும்பினாலும் என் ஆத்மா விரும்ப

வில்லை. ஆம், முடியவே முடியாது. இளவரசரின் உருவத்தை அன்புடன் நோக்கவேண்டுமென்று நான் விரும்பினாலும் அதே சமயத்தில் காலஞ்சென்ற என் தாயாரின் உருவம் துக்கத்துடன் தோன்றி இளவரசர் உருவத்தைமறைத்து அவளைக் கொலைசெய்த ஒருவரை நான் நேசிப்பது சரியா என்று அறிவுறுத்துகின்றது.

"ஐயோ கடவுளே! என்ன எண்ணமிது? இவ்வாறு சிந்திக்கும்போதே என் தேகம் முழுதும் நடுங்குகின்றதே! என் தகப்பனார் கொலைஞனென்றும், அதுவும் என் தாயாரையே கொலை செய்தவனென்றும் நினைக்கும்போது உள்ளம் நடுக்குறுமலிருக்குமோ? ஆ! என் சிறிய தாயார் மாளிகையின் அறையில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுவரும் என் தாயாருடைய படத்தில் அவளுடைய இனிய வதனத்தைப் பார்க்கும்போதே அந்த தெய்வ கன்னிகைபோன்ற மாதின் முன் முழங்காலிட்டுப்பணிந்துகிடக்கலாமா என்றேமேதான்றுகிறது. ஆனால் அதே சமயத்தில் என் தந்தையாரின் உருவம் என் மனக்கண்முன் தோன்றவும் சந்தோஷ உணர்ச்சியெல்லாம் மறந்து ஒருவித கவலையும் துக்கமும் என் ஆத்மாவைச் சூழ்ந்துகொள்கிறது. ஓ கடவுளே! இனி இளவரசரின் உருவமே என் கண்முன் தோன்றுமற்படி செய்துவிடுவாயா? ஏனெனின் அவருடைய உருவத்தைக் காண என் மனம் சகிக்கவில்லை. மேலும் அவரைப் பார்க்கவேண்டுமென்றால் என் உணர்ச்சி பலவித மாறுதல் அடைகின்றது அவருடைய உருவத்தைப் பார்க்கும்போதே மின்சார சக்தி போன்ற ஒரு வேகம் என் தேகமுழுதும் ஓடுகின்றது. அப்போது நான் அவ்வுருவத்தைவிட்டு ஓடவேண்டியதாகவிருக்கின்றது. அதுவும் என்னை வேட்டையாடவரும் ஒரு மிருகத்தைக் கண்டால் எப்படி பயந்து ஓடுவேனோ அப்படி ஓட

வேண்டியதா யிருக்கிறது. அவர் உருவத்தைக் காணும் போது அதுவே என் கெட்டகாலமெல்லாம் ஒன்ருகத் திரண்டு உருவெடுத்தாற்போன்று தோன்றுகிறது. எனக்கு இவ்வளவு கவலையெல்லாம் ஏற்பட்டதற்கும், இப்போது நான் இவ்வளவு கஷ்டப்படுவதற்கும் என் தந்தையின் செயலே காரணமென்று கூறுவது மிகையாகாது.''

ஜகதீஸ்வரி இவ்வாறு பலவாறு அடிக்கடி சிந்தித்துக் கொண்டும், அதை மறப்பதற்கு அவள் முயற்சி செய்து கொண்டும் அவஸ்தைப் படுவதுபற்றி நாம் அதிகமாக விவரிக்கவேண்டியதில்லை. நாளடைவில் அவளுடைய மனம் மாறுபட்டுக்கொண்டே வந்து இறுதியில் தன் தந்தை என்னும் மாத்திரத்தில் வெறுப்பும் ஆத்திரமும் ஏற்பட்டதுடன் பயங்கரமும் தோன்றலாயிற்று என்று மட்டும் கூறினல் போதுமானது. அவள் இராக்காலங்களில் இளவாசனே ஒரு கோர ரூபத்துடன் தன்முன் தோன்றி ஏதோ மிரட்டிவிட்டு அவள் தலைமீது கையை ஓங்குவதுபோல் கனவுகண்டு பீதியடைவாள். ஏன்! இரவில் மட்டும்? பட்டப்பகலிலும் சிற்சில சமயங்களிலும் அந்த இருண்ட உருவம் தன்முன் தோன்றி சூரிய வெளிச்சம் தோன்றுதபடி மறைக்கவும் முயற்சிப்பதைக்கண்டு பயந்து தன் இரு கண்களையும் கரத்தால் மூடிக்கொண்டு ஓவென்று வாய்விட்டும் அலறுவாள். இவ்வாருக திக்கற்ற ஜகதீஸ்வரியின் மனமே பயத்துக்கும் பீதிக்கும் இரையாகிச் சதாகாலமும் பீதியிலே மூழ்கிக்கிடந்தாள்.

காமாட்சியம்மாள் இதையெல்லாம் கவனிக்கவில்லையா யென்றல் இல்லை என்றுதான் கூறவேண்டி யிருக்கிறது. ஏனெனின், ஜகதீஸ்வரி, அம்மாளிகையில் கொண்டுவந்து வைக்கப்பட்டதுமுதல், தான் பைத்தியக்காரர் விடுதியில்

தான் வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் ஆதலின் மன அமைதியை அடைய முயற்சிக்க வேண்டுமென்றும் உண்மையிலேயே நினைத்து அவள் வெளிப்பார்வைக்கேனும் மிகவும் மன அமைதியும் திருப்தியும் உடையவள்போல் நடந்து கொண்டதால் அவளது உள்ளத்தில் ஊசலாடிக்கொண்டிருந்த பீதியும் கவலையும் எவருக்குமே காணப்படவில்லை. ஆனால் அப்பெண்மணி அவ்வாறு மேலுக்குமட்டும் மன அமைதியுடையவள்போல் நடந்துகொண்டது எவரையும் ஏமாற்றுவதற்கு அல்ல என்பதும், உண்மையில் தன் விடுதலையை நாடி வாஸ்தவத்திலேயே தான் பைத்தியக்காரியோ என்று நினைத்தே அவ்வாறு மன அமைதியடைய முயற்சித்தாள் என்பதும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிரம்பியிருக்கின்ற சர்வ வியாபி நன்கு அறிவார். தனுக்கு செய்தல் என்னும் பதம் என்ன பொருளில் சாதாரணமாக உபயோகப்படுகிறதோ அவ்வகையில் அவளுக்கு ஒன்றும் தெரியாது அவள் அவ்வளவு நிஷ்களங்கமானவளாக இருந்தாள். ஐயோ பாவம்! தன் மனம் குழப்பமடைந்து பைத்தியக்காரிபோல் ஆகிவிட்டதால்தான் அவளை அங்கு வைத்திருக்கிறார்களென்றும், மன அமைதி விரைவில் ஏற்படுத்திக் கொண்டால்தான் அங்கிருந்து விடுதலையடைந்து தன் பந்துமித்திரர்களிடம் போய்ச்சேரலாமென்றும் உண்மையிலேயே அவள் நம்பியதனால்தான் அவ்வாறு மன நிம்மதியை யடைய முயற்சித்தாள் என்பது வாசகர்களுக்கும் தெரிந்த விஷயம். ஆதலின் அவளிடம் தோஷமில்லை யென்பதும், அவள் யாரையும் ஏமாற்ற முயலாமல் தன் சௌகரியத்திற்காகவே அவ்வாறு நடந்துகொண்டாளென்பதும் வெளிபாகிற தல்லவா?

ஜகதீஸ்வரியை இவ்வாறு பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டுவந்து அம்மாளிகையில் வைத்த ஏழு தினங்களுக்

குப் பின்னர் எட்டாவது தினம் காலையில், காலை ஆகாரம் முடிந்தபின்னர் காமாட்சியம்மாள் ஜகதீஸ்வரியிடம் பின்வருமாறு கூறினாள்:—"அன்புள்ள ஜகதீஸ்வரி! நீ இம்மாளிகைக்குக் கொண்டுவரப்பட்ட அந்த இரவிலேயே நான் உன்னிடம் பேசியபோது மறுநாள் பல விஷயங்களைப்பற்றி உன்னுடன் பேசவேண்டியிருக்கிறதென்று கூறினேனல்லவா? ஆயினும் வந்த அவசரத்தில் அம்மாதிரி பல விஷயங்களைப் பற்றிப் பேசுவதைவிட உனக்கு இந்த இடம் நன்றாகப் பழகிய பின்னரும், என்னைப்பற்றி நீ நன்றாகத் தெரிந்துகொண்ட பின்னரும் பேசுவதே நலமெனக் கருதி மறுநாளே ஒன்றும் பேசாமல் நிறுத்திவைத்தேன். இப்போது நான் எதிர்பார்க்கும் நிலைமை ஏற்பட்டிருக்குமென்று நம்புகிறேன். ஆதலின் நீ விரும்பினால் நாம் அந்த சம்பாஷணையை இப்போது ஆரம்பிக்கலாமென்று நினைக்கிறேன். உன் அபிப்பிராயம் என்ன என்பதைத் தயவுசெய்து தெரியப்படுத்தவும்."

காமாட்சியம்மாள் அவ்வாறு கூறியதைக்கேட்ட ஜகதீஸ்வரி, தன் கவலையையும், பீதியையும், மற்றும் பலவகையான குழப்பங்களையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு, அம்மா! இப்போது நீ கூறியவற்றை நிதானமாகவும் நன்றாகவும் கவனித்தேன். என் நன்மையைப்பற்றிய விஷயத்தை நீ பேசப்போவதாகத் தெரிவதால் அவ்வாறே அச் சம்பாஷணையில் ஈடுபடுவதில் எனக்கும் திருப்தியையே உண்டாக்கும். ஆதலின் உன் இஷ்டப்படியே நாம் நீ குறிப்பிடும் சம்பாஷணையைத் தொடங்குவோம்," என்று பதிலுரைத்தாள்.

அதைக்கேட்ட காமாட்சியம்மாள் தன் நாற்காலியை ஜகதீஸ்வரி உட்கார்ந்திருந்த ஆசனத்தின் அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு, "அப்படியானால் கவனமாகவும் பொறுமையுடனும் கேள். அனுபவமும் பூரண ஞானமும் இல்லாத

உன் வயதைப்போன்ற வயதுடையபெண்கள், தங்களுடைய இன்ப வாழ்க்கைக்கேற்ற துறை எது என்பதை நிர்ணயித்துக்கொள்வதில் தாங்களே சமர்த்தர்களென்றும், தாங்கள் நினைக்கும் வழியே சரியானதென்றும் நினைக்கின்றனர். ஆனால் உண்மையான இன்பத்தை அவ்வழியில் பெறமுடியாது என்பதை நான் உனக்கு வற்புறுத்திக் கூறுகிறேன். இளம் பெண்களின் பிரியமுள்ள பந்துக்கள், அவர்களுக்குப் புத்திகூறித் தாங்கள் சரியென்று கருதும் வழியில் செல்லும்படி தூண்டுவார்கள். அவர்கள் கூறுவதில் விசேஷமாகத் தவறுதல் இராது. ஆயினும் தாங்கள் நினைப்பதைவிடச் சிறந்ததான ஒரு வழி அவர்களுக்குத் தோன்றுவிடின் அவர்க்ள் என்ன செய்ய முடியும்? தங்களுக்குத் தோன்றியதில் சிறந்ததையே அவர்கள் யோசனை கூறுவார்கள். அதுமட்டுமா? சிற்சில வேளைகளில் இன்பத்தை அனுபவிப்பதற்குரிய மிகச் சிறந்த வழிதோன்றினும் அதனிடமும் சந்தேகமும் அச்சமும் கொண்டு அதை வேறுவிதமாகவும் கருதிவிடுகின்றனர். அதற்குக் காரணம் அவ்வழி ஒழுக்கம் என்னும் கட்டுப்பாட்டுக்கு மீறியதோ என்று பயந்துவிடுவதாகும். ஆயினும் இவ்வுலகில் நாம் அனுபவிக்கவேண்டிய இன்பத்தைமட்டும் கவனிக்கும்போது அந்த வழியே சிறந்தது என்பதை அறியலாம். இவ்வாறு நான் கூறுவதன் பொருளை நீ அறிந்துகொள்கிறாயோ இல்லையோ தெரியவில்லை.'' என்று கூறிக்கொண்டே ஜகதீஸ்வரியின் முகத்தை உற்று நோக்கினாள். அப்போது ஜகதீஸ்வரி மனக்குழப்பத்துடனும், ஒன்றும் விளங்காதவள்போலும் தன்னை நோக்குவதை அறிந்தாள்.

ஜகதீஸ்வரி :—உண்மையைப் பேசவேண்டுமாயின், நீ இப்போது எதைப்பற்றிப் பேசுகிறாய் என்பதே எனக்கு

விளங்கவில்லை யென்றுதான் கூறவேண்டும். இதே வாக்கியங்களை நான் ஒரு புஸ்தகத்தில் படித்திருப்பேனாயின் என் புத்திக்கெட்டாத ஏதோ விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும் விஷயமெனவே கருதுவேன்.

காமாட்சியம்மாள்:—அப்படியானால் நான் இன்னும் தெளிவாகவும் பொருள் விளங்கும்படியும் பேசுகிறேன். பொதுவாகப் பெண்களைப்பற்றிப் பேசுவதற்குப் பதிலாக உன்னைப்பற்றிய விஷயத்தையே குறிப்பிட்டுக் கூறுகிறேன். உனக்கு மதுரைநாயகம் பிரபுவினிடம் ஒருவித அன்பு ஏற்பட்டிருக்கிறது. அவரை மணந்து கொண்டு அவருடன் வாழ்க்கையை நடத்தினால்தான் நீ உண்மையான இன்பவாழ்க்கையை அனுபவிக்கமுடியும் என்றும் நம்பியிருக்கிறாய். உன் பந்துமித்திரர்களும் நீ யோசித்துள்ள இம்முறையில் உனக்குத் துணையாக இருந்து நீயும் மதுரைநாயகம்பிரபுவும் கலியாணம் செய்துகொள்ளவும் உதவிபுரிய சித்தமாக இருப்பதாகவே வைத்துக்கொள்வோம். இப்போது சாதாரண வாழ்க்கைமுறையில் நாம் நினைக்கிறபடி நடக்கும் வரையில் எல்லாம் சரியே. ஆனால் உன்விதி வேறுவிதமாக இருந்து அந்தவிதத்தில் நீ செல்லும்படியான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு, இப்போது நீ உன் இன்ப வாழ்க்கைக் கேற்றதெனக் கருதியுள்ள துறையை விட்டுவிட வேண்டுமென்று கூறினால் நீ என்னசெய்வாய்?

ஜக:—ஓ! ஒருவர் தன்னுடைய விதியைமீறிய காரியங்களைச் செய்வது எவ்வளவு கஷ்டம் என்பதுபற்றி நான் அறிந்தும் உணர்ந்தும் இருக்கிறேன். அந்த விதியின்படியே எல்லாம் நடக்கிறது என்பதற்குரிய அனுபவமும் நான்

பெற்றுவிட்டிருக்கிறேன். ஆயினும் என்னுடைய எதிர் கால நிலைமைக்கேற்ற சௌகரியம் அமைக்கும் வழி உன் வசத்திலேயே சிக்கிக்கொண்டிருப்பதுபோல பாவனை செய்யவேண்டாம். என்விதி உன்னிடம் இல்லை. மேலும் கடவுள் என்னை இனி எப்படி வைக்கப்போகிறார் என்பதுபற்றி உன்னிடம் எதுவும் முன்னுடியாகவே இரகசியமாய்த் தெரிவித்துவிடவுமில்லை.

ஜகதீஸ்வரி இவ்வாறு சாமர்த்தியமாகவும், துணிவுடனும் பேசியதைக்கண்ட காமாட்சியம்மாள் திடுக்கிட்டு அவள் என்னசொன்னாள் என்பதையும், இனி எவ்வாறு பேசுவது என்பதையும் அறியமுடியாமல், "அன்புள்ள ஜகதீஸ்வரி! அப்படி நினைக்கவேண்டாம். ஏதோ தீர்க்கதரிசனம் கூறத் தெரிந்தவள்போல் பாசாங்கு செய்யவில்லை. உனக்கு நேரப்போகும் பல விஷயங்களையும் நான் ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கிறேன். இயற்கையிலும் அப்படித்தான் நடக்கப்போகிறது. நான் ருஜூப்பிக்க முயல்வது யாதெனின், நீ எந்தவழியில் நடந்துகொண்டால் உனக்கு இன்பவாழ்க்கை ஏற்படுமென நினைக்கிறாயோ அது தவறு என்பதும், வேறு வழியில்தான் நீ இன்பம் அனுபவிக்க முடியுமென்பதுமே யாகும். அந்த வேறுவழி என்ன என்பதும் எனக்குத் தெரியும். அதைச் சொன்னால் நீ அந்த யோசனையை ஆவலுடன் வரவேற்பாயா? அதற்கு நீ என்ன பதில்கூறுவாய்?" என்று கேட்டாள்.

காமாட்சியம்மாள் இவ்வளவு தந்திரமாகவும், ஆழ்ந்த கருத்துடனும் என்னசொல்லப்போகிறாள் என்பதை ஒருவாறு யூகித்தறிந்தவளேபோல் ஜகதீஸ்வரி காமாட்சியம்மாளை உற்றுநோக்கிக் கவலையுடன் மெதுவானகுரலில், "அம்மா! நீ ஏதோ எனக்குத் தீமைசெய்ய நினைக்கிறாயென்றோ அல்லது கெட்ட யோசனையைச்சொல்ல முயற்சிக்கிறாய் என்றோ

நான் ஒருகணமேனும் கருதத் துணியவில்லை. ஆயினும் நீ கூறிய வார்த்தைகள் ஏதோ கூரிய ஆயுதம்போல் என் ஹிருதயத்தில் குத்தியிருக்கின்றன. இப்படிப்பட்ட சம்பவத்துக்குத்தான் எனக்குக் காரணம் விளங்கவில்லை,'' என்று பதிலளித்தாள்.

காமா:—ஓ! நான் கூறியது உனக்குச் சரியாக விளங்கவில்லை போலும்!

அப்போது ஜகதீஸ்வரி அழுதகண்ணும் சிந்தியமூக்குமாக மிக துக்கத்துடன் கண்களில் கண்ணீர் சொரிய, "ஐயோ! நான் எனதருமை மதுரைநாயகம்பிரபுவை மறந்துவிட வேண்டுமென்றும், அவரைக் கலியாணம் செய்து கொள்வதென்னும் எண்ணத்தை விட்டுவிடவேண்டுமென்றும் கூறுகிறாயா?'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

காமா:—ஆமாம்! நான் அதைத்தான் சொல்லுகிறேன். நீ உண்மையில் இவ்வுலகில் நல்ல சுகத்தை யடையவேண்டுமாயின் உன் மனக்கண்ணிலிருந்தும் அந்த மதுரைநாயகம்பிரபுவின் உருவத்தையே அப்புறப் படுத்திவிட வேண்டுமென்றுதான் கூறுகிறேன்.

ஜக:—ஏன்? ஏன்? அவ்வாறு கூறுகிறாய். எனக்குக் கவலையாகவும் பீதியாகவும் இருக்கிறதே. அவனை நேசிப்பதற்குரிய யோக்கியதை எனக்கு இல்லையா? அல்லது நான் நேசிப்பதற்காக நீ எனக்கொரு கணவனைத் தயாரித்திருக்கிறாயா? அவனே எனது நேசத்தை விரும்பவில்லையா?

காமா:—அம்மணி! எனதன்புள்ள குழந்தாய்! நான் உன்மீது தாய்போல் அன்புவைத்துக் கூறுவதை நிதானமாகக் கேள். மதுரைநாயகம் பிரபுவைவிட நல்ல பதவியிலும் அந்தஸ்திலும் உள்ளவர்களையும் அவரைவிட அழகானவர்களையுமேயல்லவா நீ நேசிக்கவேண்டும்.

ஜக:—அப்படியானல் என்னல் நேசிக்கப்படுவதற்குரிய யோக்கியதை அவருக்கில்லை என்பதை ருஜுப்பிக்க உன்னல் முடியுமா? இல்லவே இல்லை. உன்னல் அவ்வாறு செய்யமுடியாது. என்பதை நான் அறிவேன். நான் உன்னை நம்பவேமாட்டேன்.

ஜகதீஸ்வரி இவ்வாறு உறுதியுடன் கூறியதைக்கேட்ட காமாட்சியம்மாள் எப்படியாவது செய்து ஜகதீஸ்வரியின் மனத்தில் மதுரைநாயகம்பிரபுவிடம் ஒருவித கெட்ட எண்ணத்தை உண்டாக்கிவிடவேண்டும் என்று கருதி அதற்கென்ன வழி செய்வதென்று சிறிதுநேரம் யோசித்துப் பின்னர் மிக்க சிரத்தையுடன் கூறுபவள்போல், "அன்புள்ள ஜகதீஸ்வரி! மதுரைநாயகம்பிரபு உனக்குச் சிறிதும் ஏற்றவனல்ல என்பதற் கறிகுறியாக அவனுடைய குணத்தைப்பற்றி ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன் கவனமாகக் கேள்" என்ருள்.

அப்போது ஜகதீஸ்வரி மிக்க ஆத்திரத்துடனும் பரபரப்புடனும் மனக்குழப்ப மடைந்தவளாய்த் தன் இருகாங்களையும் ஒன்ருகச் சேர்த்துக் குவித்துக்கொண்டு, "அது பொய், அது பொய்! நீ கூறுவதை நம்ப என்னல் முடியாது. நான் பழைய சம்பவங்களை நினைத்துக்கொண்டு சிற்சில சமயங்களில் உளறுவதாலும் மற்ற சிலவகைகளாலும் என்னை நீங்கள் பைத்தியக்காரி என்று நினைத்தாலும், உண்மையிலேயே சிற்சில சமயங்களில் என் மனம் நிதானத்தை இழந்துவிடுகிறதென்ருலும், எனதருமை மதுரைநாயகம்பிரபு என் விஷயத்தில் பொய்யுடையவன் என்று நம்பக்கூடிய அவ்வளவு ஸ்மரணை தப்பியவளாக நான் ஆகிவிடவில்லை என்பது நிச்சயம். ஓ மாதே! இப்போதுதான் உன் கருத்தில் ஏதோ கெட்ட நோக்க மிருக்கவேண்டும் என்னும் சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது; அல்லது என்னுடைய யோக்கியதையையும் குணத்

தையும் சோதிக்க நீ இவ்வாறு செய்கிருயோ என்பதும் எனக்குத் தெரியவேண்டும். ஆனல் நீ ஏதேனும் தவருன எண்ணம் வைத்துக்கொண்டிருப்பதாக இருந்தால் அது மிக அபாயமானதும் தீமை நிறைந்ததுமாகும்,'' என்று கூறினுள்.

இவ்வாறு ஜகதீஸ்வரி ஆத்திரத்துடன் கூறியதைக்கேட்ட காமாட்சியம்மாள் தன் ஆசனத்தினின்றும் எழுந்துநின்று ஜகதீஸ்வரியின் இருகாங்களையும் பிடித்துகொண்டு, "குழந்தாய்! இவ்விஷயமாக நாம் இப்போது அதிகம் ஒன்றும் பேச வேண்டாமென்று நினைக்கிறேன். அநாவசியமாக உன் மனதைப் புண்படுத்தவோ அல்லது அளவுக்குமீறிய வகையில் உன்னைச் சோதிக்கவோ நான் விரும்பவில்லை. ஆனல் இவ்விஷயமாக உனக்கு அதிக சமாசாரத்தை அறிவிக்கக்கூடிய ஒரு ஆடவரை நாளையதினம் உனக்கு அறிமுகம் செய்து வைக்க நீ அனுமதிகொடுப்பாயா? அவ்வரைக்கண்டு பேச உனக்குச் சம்மதமா என்பதைத் தெரிவித்துவிடு,'' என்று கேட்டாள்.

ஜகதீஸ்வரி உண்மையிலேயே காமாட்சியம்மாள் குறிப்பிடும் ஆள், யாரோ ஒருவைத்தியனுகத்தான் இருக்கவேண்டுமென்றும், தன் மனோநிலையைச் சோதிப்பதற்காக அம்மாது எது எதைப்பற்றியோ பேசியிருக்கிருளென்றும் நம்பி, அவ்வாறு அந்த வைத்தியர் பார்ப்பதனல் நன்மைதானே என்றும் நினைத்து அதிகநேரம் யோசிக்காமலும் ஒருவாறு திருப்தியுடன் கூறுபவள்போலும், "சரி; நான் உன் இஷ்டப்படியே நீ குறிப்பிடும் ஆளைக்காணத் தயாராக இருக்கிறேன். காண்பதுமட்டுமல்ல. அவர் கூறுவதையெல்லாம் கவனமாகக் கேட்டு அதற்கேற்ற பதில்களையும் நிதானமாகவும், ஆத்திரமின்றியும் கொடுப்பேன்,'' என்று விடையளித்தாள்.

அதற்கு காமாட்சியம்மாள் "ஆ! நீ மட்டும் இப்போது நீ கூறுவதுபோலவே அந்த ஆள் கூறுவதைக் கவனமாகக் கேட்பதாக இருந்தால் உன்னுடைய நன்மைக்கான வழியிலேயே நீ நடந்துகொள்கிறுயென்று சந்தோஷப்படவேண்டியதுதான்," என்று கூறினுள். அப்போது ஜகதீஸ்வரி "ஆம்; அதிலொன்றும் சந்தேகமில்லை. நான் இப்போது சொன்னபடியே நடந்துகொள்வேன் என்பதை நிச்சயமாக நம்பு. ஆனால் இப்போது நான் உன் அனுமதியின்மீதே என் அறைக்கு ஒய்வெடுத்துக் கொள்வதற்காகப் போகவிரும்புகிறேன். இப்போது நீ கூறியவைகளையெல்லாம் பற்றி நான் சிந்திக்கவேண்டும்" என்று கூறவே காமாட்சியம்மாளும் அவ்வாறே செல்லும்படி அனுமதித்துவிட்டுத் தான் குறிப்பிட்ட ஆளை மறுநாள் பகல் அங்குவரும்படி தெரிவிப்பதாகவும் சொன்னுள்.

ஜகதீஸ்வரி, அதுவரை காமாட்சியம்மாளுடன் பேசிக்கொண்டிருந்த அறையைவிட்டுத் தன் அறைக்குச்சென்று ஒரு ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு தான் கேட்டதைப் பற்றியெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தாள். நீண்டநேர யோசனைக்குப் பின்னர் அவள் பின்வருமாறு தனக்குள் சொல்லிக்கொள்ளலானுள்:—"இல்லவேயில்லை. எனதன்புள்ள மதுரைநாயகம் பொய்யுடையவனுக ஒருகாலும் இருக்கவேமாட்டான். அதிலும் என்னுடைய நேசத்தைப் பெறுவதற்கு யோக்கியதை இல்லாதபடி அவன் ஒருகாரியத்தையும் செய்திருக்கமாட்டான். ஓ! காமாட்சியம்மாளின் எண்ணம் வேறுக இருந்திருக்கலாம். அதாவது நான் இவ்வாறு பைத்தியம் பிடித்தவள்போல் மனக்கோளாறு அடைந்தவளாய் இருப்பதால் அவனை விவாகம் செய்துகொள்ள எனக்கு யோக்கியதை இல்லையென்று அவள் நினைத்திருக்கலாமோ?

ஒருவேளை அதுதான் மெய்யாகிவிடுமோ? இப்படிப்பட்ட நிலைமையில் நாங்கள் விவாகம் செய்துகொண்டாலும் அதனால் ஒருவித இன்பத்தையும் அடையமுடியாது என்று அவள் கருதியிருப்பாளோ? ஆம்! இவ்வித எண்ணத்தைத் தான் அவள் வேறுவிதமாகப் பேசி இருக்கிறாள். சற்று நிதானமாக நான் அதைப்பற்றி ஆராயவே உண்மை எனக்குப் புலனாகிவிட்டது. ஆரம்பம் முதல் அம்மாது பேசியதிலிருந்தே அவள் நான் தவறாக எதையோ நினைத்துக்கொண்டிருக்கிறேனென்றும், நான் வேறுவழியில் செல்லவேண்டுமென்று என் விதி கூறுகிறதென்றும் இன்னும் பலவிதமாகவும் சொன்னதெல்லாம் எனதருமை மதுரைநாயகம் உண்மையானவனாகவும் அன்புடையவனாகவும் இருந்தபோதிலும், மனக்கோளாறு பெற்றுள்ள நான் அவளை மணப்பதால் இருவருடைய வாழ்க்கையிலுமே இன்பம் காணப்படாதாகலால் எங்களிருவருடைய கலியாணத்தால் பிரயோசனப்படாது என்று அவள் கூறினள் போலும்!

"நாளை என்னைச் சந்திக்க வரப்போவதாகச் சொன்ன அந்த ஆள் யாராயிருக்கக்கூடும். ஏதோ ஒரு டாக்டராகத் தான் இருக்கவேண்டும். ஒருகால் அவர் வந்தால் நான் மன நிம்மதியை அடைவதற்காக என்னென்ன தெரிந்துகொள்ள வேண்டுமோ அதைப்பற்றியெல்லாம் கூறுவாரென்றே நினைக்கிறேன். ஆம், ஆம். இப்போது எல்லாம் எனக்குத் தெரிந்துவிட்டது. நான் எவ்வளவுதூரம் மனக்கோளாறு அடைந்திருக்கிறேனென்பதைப் பகிரங்கமாக என்னிடம் தெரிவிக்க அம்மாது அஞ்சுகின்றாள்போலிருக்கிறது. பாவம்! என்ன அனுதாபம்! ஆகவே பெண்களைவிட துணிவுகொள்வதில் சிறந்தவரான ஒரு ஆடவர்மூலம் அதை எனக்குத் தெரியப்படுத்த அவள் யோசித்திருக்கிறாள்போல் இருக்கிறது.

186565

இப்படியா என் இன்பமெல்லாம் இவ்வுலகில் பாழாய்விட்டது. ஆனால் வேறு ஒரு வழியை நான் பின்பற்றினால் எனக்கு இன்பம்கிடைக்குமென்று காமாட்சியம்மாள் சொன்னாளே அந்த வழிதான் என்ன என்பது தெரியவில்லையே? அவ்வாறு அவ்வழியில் நான் சென்றால் என் வாழ்க்கை அதிக இன்பமானதாயும், மேன்மையானதாயுமிருக்குமென்று சொன்னாளே. ஒருகால் என் தந்தையாகிய இளவரசர் என்னை இப்போது நான் வசித்துவரும் என் பந்துக்களிடமிருந்து பிரித்து அரண்மனை வாழ்க்கைக்கு அழைத்துச் செல்ல உத்தேசித்திருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. ஆம்; இதைத்தான் அவள் மனதில் நினைத்துக்கொண்டு அவ்வாறு பேசியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் வேறு எதைப்பற்றி அவள் நினைத்திருப்பாள். என் தந்தையாகிய இளவரசர் நான் ஒருத்தி உலகில் இருக்கிறேன் என்பதையே மறந்துவிட்டு என்னைப்பற்றிக் கனவிலும் கருதாமலும், என்னை அவருடைய அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோக முயற்சிக்காமலுமிருப்பதே எனக்குச் சந்தோஷமாயிருக்கும். பற்பல குற்றங் குறைகளோடுகூடிய அரண்மனை வாழ்க்கை எனக்கு ஒருகாலும் இன்பம் தராது. ஆதலின் தெய்வமே! என்னை இளவரசர் அடியோடு மறந்துவிடும்படி நீ செய்யக்கூடாதா?''

வாசகர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் நாம் மேற்கூறிய வசனங்களை ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் கோர்த்துக் கூறியிருக்கிறோம். ஆனால் ஜகதீஸ்வரியைப்போன்ற மனோநிலையில் உள்ள எவரும் இவ்வாறு ஒழுங்காகப் பேசியிருக்கமுடியாது என்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம். ஜகதீஸ்வரி அப்போதப்போது நிறுத்தியும், சிற்சில சமயங்களில் கண்ணீர் விட்டுக்கொண்டும், முன்பின் சம்பந்தமில்லாத வகையிலும்

தனக்குள் பேசிக்கொண்டாள். ஒவ்வொரு புதிய எண்ணம் தோன்றும்போதும் ஒவ்வொரு வகையான உணர்ச்சியை அவள் அடைவாள். சில சமயங்களில் தனக்குள்ளேயே சிரித்துக்கொள்வாள். வேறு சில சமயங்களில் கவலையுடன் எதையும் நினையாமல் தலையை தொங்கவைத்துக்கொண்டிருப்பாள். அடுத்த நிமிஷமே மிகுந்த உற்சாகத்துடன் வேறு பல விஷயங்களைப்பற்றித் தனக்குள் பேசிக்கொள்வாள். சில சமயங்களில் பெருமூச்செறிவாள். அவளது செய்கைகளைக் கண்ட ஒருவர் அவள் மனமுடைந்துபோய் அளவிலா விசாரத்தில் மூழ்கியிருக்கிறாளென்று நிச்சயமாகக்கூறுவார்.

இவ்வாறு நீண்டநேரம் சிந்தித்துக்கொண்டிருந்த பின்னர், அப்படிப்பட்ட துக்கவேளையிலும் அழகுடனும், கண்டோர் மனதைக் கவரும் வதனத்துடனும், இன்பமான குணத்துடனும் கூடிய ஜகதீஸ்வரி ஒருவாறு சமாளித்துக்கொண்டு, தன் துக்கத்தையெல்லாம் உதறித்தள்ளி, தைரியத்தையும் பெருந்தன்மையையும் வரவழைத்துக்கொண்டும் தான் இருந்த அறையைவிட்டுச் சொற்ப நேரத்துக்குமுன் காமாட்சியம்மாளுடன் பேசிக்கொண்டிருந்த அறைக்குச் சென்று தைரியமாகவும் உறுதியுடனும் அம்மாதின் முன் நின்று, "அம்மா! சற்று நேரத்துக்கு முன்பு நாம் இருவரும் பேசிய எல்லா விஷயங்களையும்பற்றி விவரமாகச் சிந்தித்தேன். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் எனக்கு நீ கூறியது விளங்கவில்லை. அது என்ன என்பதை விளக்குவாயா? நான் என் வாழ்க்கையில் எனக்கு இன்பம தருவது எது என்று இப்போது நினைத்திருக்கிறேனோ அதை அடியோடு விட்டு வேறு ஒருவழியில் சென்றால் அதிகமான இன்பத்தையும் சௌகரியத்தையும் அடையலாமென்று கூறினாயே. அது என்னவழி? இவ்விஷயத்தில்தான் நீ சொன்னதில் எனக்கு

அதிக சந்தேகம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது" என்று கேட்டாள்.

காமாட்சி:—ஆ! அப்படியா? உனக்கு சந்தேகம் ஏற்பட்டு விட்டதா?

ஜக:—ஆம்! எனக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. நீ சொன்ன வார்த்தைகளின் உட்கருத்து என்ன என்பது தெரியவில்லை. என் விஷயத்தில் கவனம் செலுத்தக் கூடிய, அதிக அந்தஸ்திலுள்ளவர் யாரேனும் இருக்கிறார்களோ?

காமா:—அப்படியானால் என் உள்ளத்தில் இருப்பதை நீ அறிந்துகொண்டுவருகிறாய் என்றே கூறவேண்டும். ஆயினும் இப்போது நான் இருப்பதைவிட இன்னும் சிறிது விளக்கமாக இருப்பதே நலமென்று கருதுகிறேன்.

ஜக:—ஆம், அம்மா! நீ சொல்வது இன்னதென்று நான் நன்றாகத் தெரிந்துகொள்ளும்படி நீ இன்னும் விளக்கமாக இருப்பதுதான் நல்லது. நீ என்னசொல்கிறாயோ என்று தெரிந்துகொள்ள முடியாமலும், இப்போது உன் வாயிலிருந்து என்ன வரப்போகிறதோ என்னும் அச்சத்துடனும் நான் மனம் கலங்கியவளாய் நாவெடுத்துப் பேசமுடியாமலும் அவஸ்தைப்படுகிறேன்.

காமா:—ஆ! எனதன்புள்ள குழந்தாய்! நீ எவ்வளவு அழகுடனும், கள்ளங்கபடமற்ற பரிசுத்த மனத்துடனும் இருக்கிறாய்? நான் சொன்னதன் உட்கருத்தை உண்மையிலேயே நீ யூகித்தறிந்திருக்கிறாயோ?

ஜக:—நான் மேன்மைதங்கிய நமது இளவரசர் பெயரைப் பற்றிக் கூறும்போதே, நீ உள்ளத்தில் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாயோ அதை நான் ஒருவாறு அறிந்துவருகிறேன் என்பது புலப்படுகிறதல்லவா?

காமா:—ஆம்! நீ நினைப்பது சரிதான், ஜகதீஸ்வரி! நீ சரியான விஷயத்தையே தெரிந்துகொண்டிருக்கிறாய். ஆயினும் நீ இளவரசரைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய். அவரைப்பற்றி நீ என்னசொல்லப்போகிறாய்? உடனேசொல் பார்ப்போம்.

ஜக:—அம்மா! நீ குறிப்பிட்ட ஆள் நாளையதினம் என்னைக் காணவரும்போது நான் என் மனதிலுள்ள எல்லா விஷயங்களையும் அவரிடம் விவரமாகக்கூறி அவர் என்ன சொல்லப்போகிறார் என்பதைத் தெரிந்துகொள்கிறேன். ஒன்றும் விடாமல் என் நிலைமையையெல்லாம் அவருக்குத் தெரிவிப்பேன். இப்போது நான் மீண்டும் பல விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கவேண்டியிருப்பதால் உன் அனுமதிபெற்று நாளை அவர் வரும்வரை அதிகமாக யாருடனும் பேசாமல் என் அறையிலேயே இருக்க விரும்புகிறேன்.

காமா:—அன்புள்ள குழந்தாய்! நீ சொல்லுகிறபடியே செய்யலாம். உன்னை என்னுடனேயே வைத்துக்கொள்ளலாமென்று நினைத்தாலும் உனக்கு இஷ்டமில்லாவிட்டால் உன் இஷ்டப்படியே நீ தனியாக உன் அறையில் இருப்பதில் எனக்கு எத்தகைய ஆட்சேபமும் இல்லை. உனக்கு ஏதேனும்வேண்டுமாயின் உடனே நீ மணியை அடி. வேலைக்காரி வந்து உனக்கு வேண்டியவைகளைக் கவனிப்பாள்.

ஜகதீஸ்வரி மீண்டும் தன் அறைக்குச் சென்று அதன் கதவை உள்பக்கம் தாளிட்டுக்கொண்டாள். உடனே, காமாட்சியம்மாளுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவளுக்கு ஏற்பட்டிருந்த தைரியமும் பொறுமையும் திடீரென்று மறையவே அவள் சிறு குழந்தைபோல் திடீரென்று அழ

ஆரம்பித்துவிட்டாள். பிறகு தன் இருகரங்களையும் ஒன்றோடொன்று தேய்த்துக்கொண்டே, "ஓ! அப்படியானால், என் உயிரைவிட நான் அதிகமாக மதிக்கும் என் ஆருயிர்க் காதலனைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்துவிடவேண்டும்போலும்! ஐயோ கடவுளே! இந்தக் காதலனைப்பற்றிய நினைப்பும் நான் நினைக்கக்கூடாதென நிர்ப்பந்தம் ஏற்படும்போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டாள்.

இவ்வாறு ஜகதீஸ்வரி பலவாறு சிந்தித்துக்கொண்டு துக்கத்துடன் இருந்ததால் பலமணிநேரம் கழிந்தது. அவளுக்கு அதிக ருசிகரமான பல ஆகாரங்களை வைத்தார்கள். ஆயினும் அதில் அவளுக்கு ருசியே காணப்படவில்லை. அவள் மனம் சோர்வடைந்திருந்ததால் அவள் எப்போது இரவு உண்டாகுமென்று காத்திருந்து உடனே படுக்கையை அடைந்து படுத்துறங்கிவிட்டாள்.

படுநீலியாகிய காமாட்சியம்மாளின் தந்திரத்தைப் பாருங்கள். கள்ளங்கபடமற்ற ஜகதீஸ்வரியின் மனதைக் கெடுப்பதற்காக அவளிடத்தில் ஏதோ அதிக அனுதாபமும் அன்புமுடையவள்போலும், அவளது க்ஷேமத்தை அதிகம் நாடுபவள்போலும் பாவனைகாட்டி அவளைத் தவறான முறையில் செலுத்தச் சூழ்ச்சிசெய்வது காமாட்சியம்மாளின் அயோக்கியத்தனத்தையும் அப்படிப்பட்ட தொழிலில் அவள் தக்க தேர்ச்சி யடைந்திருப்பதையும் நன்கு வெளிப்படுத்துகிறதல்லவா? இப்படியே நம் நாட்டிலும் இன்றளவும் சில அயோக்கிய மாதர்கள். ஒன்றும் தெரியாத கபடமற்ற கன்னிகைகளைக் கெடுத்துவிடுகின்றனர். இப்பால் சென்னைபோன்ற நவீன நகரங்களில் தாழ்ந்த ஜாதியார் எனப்படுவர் முதல் உயர்ந்த ஜாதியினரெனப்படுபவர் வரையிலுள்ள மாதர்கள் சிலர் செய்துவரும் அக்கிரமங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமலிருக்க முடியவில்லை.

நல்ல குடும்பங்களிலுள்ளவர்களிலேயே சிலர் தெரிந்தோ தெரியாமலோ தவருன வழியில் சென்றுவிடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் தங்கள் பாவத்தைக் கழித்துக்கொள்ள யாதொன்றும் செய்யாமல் வாலிழந்த நரியின் கதையைப் போல் தங்களுக்குத் தெரிந்த கன்னிகைகளுக்கும், இக்கதையில் காமாட்சியம்மாள் ஜகதீஸ்வரிக்குக் கூறியதேபோல் பலவித உற்சாக விஷயங்களையெல்லாம் சொல்லி அவர்களையும் தவருனவழியில் செலுத்திவிடுகின்றனர். இது சகவாசத்தினல் ஏற்படும் தோஷமேயாகும். இதனுல்தான் நமது பெரியோர்கள் நட்பாராய்தலிலும் பலவிதமான நிபந்தனைகளை ஏற்படுத்தி ஒவ்வொருவரும் வாழ்க்கையைக் கட்டுப்பாடான முறையில் செலுத்தவேண்டுமென்று விதிகளை ஏற்படுத்தி இருக்கிறுர்கள். பெரியோர்கள் ஏற்படுத்தியுள்ள முறைகளிலும் காலநிலைக்கேற்ப சில குற்றங்குறைகள் இருக்கலாம். அவற்றை நாம் திருத்திக்கொள்ள வேண்டுமேயொழிய அதற்காகவே பெரியோர்கள் வகுத்தமுறைகளை அறவே ஒழித்துவிட்டுச் சிறிதும் கட்டுப்பாடில்லாத முறையில் வாழ்க்கையை நடத்துவதென்ருல் அது மிருகவாழ்க்கையாகவே முடியுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

# 185 - வது அத்தியாயம்

இப்போது நாம் ஜகதீஸ்வரியை அம்மாளிகையிலேயே விட்டு விட்டு, சமுத்திரத்தில் மூழ்கியும் உயிர் துறக்காதபடி விசுவநாதனுல் காப்பாற்றப்பட்டவளும், இரத்தினபுரிக்குப் புறப்பட்டவளுமான மீனும்பாளைப்பற்றிச் சிறிது கவனிப்போம். விசுவநாதனிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்ட மீனும்பாள் இரண்டொரு தினங்களுக்குள் இரத்தினபுரியை அடைந்து நேராகத் தன் பெரியதாயாரின் குமாரிகளான மதனவல்லியென்னும் கற்பகவல்லியும் கோமளவல்லியும் வசிக்கும் கந்தபுரிக்குச் சென்ருள். அவர்களனை வரும் மீனும்பாளை ஆவலுடன் வரவேற்ருர்களென்ருலும் அவளுடன் சென்ற அவளது தாயார் மரகதவல்லியைக் காணுேமே'' என்று சிந்தித்தார்கள். அவள் கந்தபுரிக்கு வெளியில் தோட்டத்திலுள்ள அம்மாடி வீட்டில் புகுந்ததும் கோமளவல்லியும் கற்பகவல்லியும் அவளை ஆர்வத்துடன் அணைத்துக்கொண்டார்கள். உடனே அவளை மாடிமீதிருந்த சுந்தரம்மாளிடமும் அழைத்துச் சென்ருர்கள்.

மீனும்பாள் அவர்களிடம் தானும் தன் தாயார் மரகதவல்லியும் பரிதிபுரம்சென்றதும் தனது சகோதரிகளைக் கண்டபோது அவர்கள் இருந்த நிலைமையையும், பிறகு அவர்களிருவரும் இறந்துபோன பரிதாபகரமான துக்கநிலையையும், அப்பிரேதங்களை அடக்கம் செய்துவிட்டபின்னர் இரத்தினபுரிக்காகப் புறப்பட்டு வந்தவழியில் தனக்கும் தன் தாய்க்கும் நேர்ந்த ஆபத்தையும், தன் தாய் சமுத்திரத்தில் மூழ்கிப்போனதையும், தான்மட்டும் உதாரகுணமுள்ள ஒரு கனவானின் துணையால் தப்பித்துக்கொண்டு சௌகரியமாக அங்கு

வந்து சேர்ந்ததையுமாக எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொன்னாள். ஆனால் தாய் உயிருடன் இருக்கும்போதே விசுவநாதனை முதன்முறை சந்தித்ததையும், பிறகு அவர்கள் வந்த படகு மூழ்கிப்போனபோது அதே விசுவநாதன் அங்கும் இருந்து உதவிசெய்ததையும் அவர்களிருவருக்கு மிடையில் காதல் உணர்ச்சி ஏற்பட்டுவிட்டதையும், அவனையே மணந்து கொள்வதாக வாக்களித்திருப்பதையும் மட்டும் சொல்லாமல் இருந்துவிட்டாள். இவ்வாறு இருந்ததற்குக் காரணம் விஷயத்தை அவர்களிடம் மறைக்கவேண்டுமென்பதல்ல. அவள் மிகவும் நற்குண நல்லொழுக்கங்களோடு கூடியவளாதலால் காதல் சம்பந்தமான விஷயத்தை அவசரப்பட்டுச் சொல்ல நாணமடைந்தாள்.

மீனாம்பாள் இவ்வாறாக கந்தபுரியில் இருந்துகொண்டிருந்தபோது அவளது ஞாபகம் முழுதும் அவளுடைய காதலனாகிய விசுவநாதனிடமே சென்று பாய்ந்திருந்தது. தான் அவனைவிட்டுப் பிரிவதற்கு முன்னர் அவனுடன்பேசிக் கொண்டிருந்தபோது அவன், "உன்னிடமிருந்து நீ சுகமாக இரத்தினபுரிக்குப்போய்ச் சேர்ந்ததாக ஒருகடிதம் கிடைக்கும் வரையில் ஒவ்வொருநாளும் எனக்கு ஒவ்வொரு யுகமாகக் கழியும்" என்று கூறியது அவளை சதாவாட்டிக்கொண்டிருந்தது. ஆகவே உடனே தன் க்ஷேமசமாசாரத்தைப்பற்றி அவனுக்கொருகடிதம் எழுத விரும்பினாளென்றாலும், கற்பகவல்லியும் கோமளவல்லியும் சதா அவளுடனேயே இருந்ததால் அவ்வாறு ஒருகடிதம் எழுத அவளால் முடியாமலிருந்தது. எனினும் இதற்கென்னவழி செய்வதென்று அவள்யோசித்து ஒருநாள் தான் இரத்தினபுரிக்குச் செல்லவேண்டுமென்று புறப்பட்டாள். கற்பகவல்லி அவளை நோக்கி ஏன் அங்கு போகிறாளெனக் கேட்டபோது சர்தார் சூரியநாயகம் பிரபுவையும் அவரது மனைவியான அமிர்தாம்பாளையும் காணச்

27

செல்வதாகக் கூறினாள். சர்தார் சூரியநாயகம் கற்பகவல்லி மதனவல்லி என்னும் பெயருடன் இரத்தினபுரி ராஜமாளிகையில் இருந்தபோது அவளுடைய இன்பத்தை அனுபவித்தவன் என்பது நேயர்கள் ஞாபகத்திலிருக்கும். ஆகவே சர்தார் சூரியநாயகம் என்னும் பெயரைச் சொன்னமாத்திரத்தில் அவள் மனதில் ஒருவித எண்ணம்தோன்றிப் பலவித பழைய விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தாள்.

அகத்தின் அழகு முகத்தில்தெரியும் என்பதுபோல் அவள் மனம் விகாரப்பட்டிருப்பதை அவளது முகக்குறியால் அறிந்துகொண்ட மீனும்பாள் அவளைநோக்கி, "ஏன்? சர்தார் சூரியநாயகம் பிரபு உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

அதற்கு கற்பகவல்லி, "ஆம்; நான் ராஜமாளிகையில் இருந்தபோது அவர் அங்கு அடிக்கடி வந்துகொண்டிருப்பார். அவர் அமிர்தாம்பாளை நேசிக்கிறுரென்றும் விவாகம் செய்துகொள்ளப் போகிறுரென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது விவாகமாகி அவர்களிருவரும் ஒன்றுக வசித்து வருகிறுர்கள்போலிருக்கிறது," என்று பதிலளித்தாள். பின்னர் மீனும்பாள் அவர்கள் அனுமதிபெற்று இரத்தினபுரிக்குப் புறப்பட்டாள். அப்படிப் போகும்வழியில் அவள் ஒரு தோட்டத்தில் உட்கார்ந்து தன் காதலனுகிய விசுவநாதனுக்கு நீண்டதொரு கடிதம் எழுதினுள். பிறகு சர்தார் சூரியநாயகம் வீட்டுக்குச் சென்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு அவள்சென்ற வண்டியிலேயே கந்தபுரிக்குத் திரும்பிவிட்டாள். ஆனுல் பாவம்! தான் விசுவநாதனுக்காக எழுதிய கடிதத்தைத் தபாலில்போட மறந்துவிட்டாள். அதுவே அவளை அதிகம் பாதித்துக்கொண்டிருந்தது.

அவள் சாதாரணமாக அங்குள்ள எல்லாருடன் பேசிக் கொண்டிருக்கும்போதும் அடிக்கடி எழுந்துபோய்த் தன் பெட்டியைத் திறந்து பார்த்துவிட்டு வருவாள். இதனுல் அவள் அப்பெட்டியில் ஏதோ வைத்திருக்கிருளென்றும் அது பத்திரமாக இருக்கிறதா என்று அப்போதைக்கப்போது பார்த்துக்கொள்கிருள் என்றும் மற்றவர்கள் தெரிந்துகொண்டார்கள். ஆயினும் அதைப்பற்றி அவளை யாரும் ஒன்றும் கேட்கவில்லை. அவள் கடிதம் எழுதிய மறுநாள் மாலை சுந்தரம்மாளும் மீனும்பாளும் ஏதோ சாமான்கள் வாங்குவதற்காக இரத்தினபுரி கடைத்தெருவுக்குச் சென்ருர்கள்.

அப்போதுதான் அவளுடைய இரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்குச் சமயமென நினைத்து கற்பகவல்லியும், கோமளவல்லியும் மிக ஆவலுடன் மீனும்பாளின் பெட்டியின் சாவி இருக்கிறதா என்று கவனித்தார்கள். தெய்வாதீனமாகச் சாவியும் அங்கு இருந்தது. இரு சகோதரிகளும் மிக அவசரமாகச் சேர்ந்துகொண்டு மீனும்பாளின் பெட்டியைத் திறந்துபார்த்தார்கள். அதில் விசேஷ சாமான் ஒன்றும் இருக்கவில்லை. ஆயினும் விசுவநாதனுக்கு எழுதப்பட்ட கடிதம்தான் இருந்தது. நற்குண நல்லொழுக்கத்திற் சிறந்தவர்களும், மீனும்பாளிடம் உண்மையான அன்புடையவர்களுமான அவர்கள் அவளுக்குத் தெரியாமல் இவ்வாறு அவள் இரகசியத்தை அறிய முயற்சித்தது நியாயந்தானு என்னும் சந்தேகம் நேயர்களுக்குத்தோன்றலாம். இங்கு நாம் கவனிக்க வேண்டியது அவர்களுடைய நோக்கமேயொழிய செயல் அல்ல. மீனும்பாளுடைய இரகசியம் முழுதையும் தெரிந்து கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு. மீனும்பாளும் வெட்கத்தினுல் சொல்லவில்லையேயொழிய இரகசியத்தை மூடிவைக்க வேண்டுமென்பது அவளுடைய எண்ணமன்று.

ஆகவே அவளுக்குத் தெரியாமலே அவளுடைய இரகசியத்தை யறிந்துகொண்டு பின்னர் அவளைப் பரிகசிக்கவேண்டுமென்பதே அவர்களுடைய அபிப்பிராயம்.

சகோதரிகளிருவரும் அக்கடிதத்தைப் பிரித்துப்பார்த்த போது அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:—"என் உயிரைக் கொள்ளைகொண்ட பிராணநாதா! என் கடிதத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகக் கழிக்கும் காதல! அடியேன் தங்களைப் படகில் சந்தித்ததுமுதல் தாங்கள் எனக்குச் செய்த அபார உதவிகளை நினைக்கும்போது, நான் உடனே தங்கள் இல்லக் கிழத்தியாக மாறித் தங்கள் சுகத்துக்காக என் வாழ்நாளை அர்ப்பணம் செய்யாதவரையில் கழியும் ஒவ்வொருநாளும் எனக்குப் பாவத்தை யளிக்கும் நாள் என்றே நான் கருதுகிறேன். நான் இறைவன் அருளாலும் தங்கள் மனப்பூர்வமான ஆசீர்வாதத்தாலும் சுகமாகவே இரத்தினபுரிக்கு வந்து எனது சகோதரிகளுடன் இன்பமாகவே காலங்கழித்து வருகிறேன். ஆயினும் என் ஆவி தங்களிடமும் உடல்மட்டும் இவ்விடமுமாக இருக்கிறது. நானோ திக்கற்றவளாய்விட்டேன். எனது பெரிய தாயாரின் புத்திரிகளின் ஆதாவிலேயே நான் இருக்கவேண்டியதாயிருக்கிறது. அவர்கள் மிக நல்லவர்கள். தாராள நோக்கமுடையவர்கள். என்னிடம் அளவிலா அன்புடையவர்கள். அவர்களுடன் இருப்பதற்காக நான் எத்தகைய விசாரமும் அடையவேண்டியதில்லை. இங்கு வராமல் தங்களிடமே நின்றுவிட்டிருக்கலாம். ஆனால் அது முறைமையாகாதல்லவா. சமூகக் கட்டுப்பாட்டை அநாவசியமாக நாம் மீறக்கூடாது. விவாகம் செய்துகொண்ட பின்னரே நாம் ஒன்றுசேர்ந்து வாழ்க்கையை நடத்துவது பெருமை தருவதாகும். நமக்குள் இருக்கும் நட்பைப்பற்றி

நான் விரைவில் என் சகோதரிகளிடம் கூறி நமது விவாகத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டுத் தங்களுக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதுகிறேன். அதுவரை பொருத்தருள்வீராக. தங்கள் நன்றியை என்றென்றும் மறவேன். தங்கள் காதலி. மீனும்பாள்''

இக்கடிதத்தைப் படித்து முடித்ததும் அதை அப்படியே முன் இருந்ததுபோல் வைத்துவிட்டு மீனும்பாளுக்கும், இனி தனியே இருக்கவேண்டிய அவசியமில்லாதபடி, ஒரு காதலன் அதிலும் நல்ல அந்தஸ்திலுள்ள ஒருவன் கிடைத்திருப்பதுபற்றிச் சந்தோஷப்பட்டார்கள். மீனும்பாள் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்க வெட்கப்படுவதால் சமயம் வாய்க்கும்போது தங்களில் யாரேனும் ஒருத்தி இது விஷயமாய் மீனும்பாளுடன் பேசி விவாகத்தை முடித்துவிடுவதெனத் தீர்மானித்தனர்.

அன்று மாலை மீனும்பாள் இரத்தினபுரியிலிருந்து திரும்பியபின்னர் கற்பகவல்லியும் மீனும்பாளும் தோட்டத்துக்கு உலாவச்சென்று அங்கே ஒரு மூலையில் போடப்பட்டிருந்த கல் பெஞ்சியின்மீது உட்கார்ந்து வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களிடையே நடந்த சம்பாஷணையின் விவரம் பின்வருமாறு:—

கற்பக:—மீனு! ஏது? நீ பரிதிபுரத்திலிருந்து திரும்பிவந்தது முதல் முன்போல அவ்வளவு உற்சாகமாக இல்லையே. என்னகாரணம். நீ இவ்வாறு கவலையுடையவள்போல இருப்பது எனக்கு வருத்தத்தைத் தருகிறது.

மீனும்:—ஆம்! பரிதிபுரத்தில் என் சகோதரிகள் மூவரும் ஒருவர்பின் ஒருவராக அதிலும் பரிதாபகரமான நிலைமையில் இறந்துவிட்டனர். அவ்வாறே என் தாயாரும் வரும்வழியில் சமுத்திரத்துக்கு இரையானாள். நானே

திக்கற்ற பாவியானேன். இப்படிப்பட்ட நிலைமையில் உற்சாகம் எங்கிருந்து இருக்கப்போகிறது?

கற்பக:—அன்புள்ள சகோதரி அவ்வாறு கூறவேண்டாம். நீ திக்கற்றவள் என்னும் ஞாபகமே உனக்கு வாராமற்படி அவ்வளவு சௌகரியமாக உன்னை வைத்துக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். நீ அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவேண்டாம். அதுமட்டுமல்ல. வேறு ஏதோ விஷயம் உன்னை வாட்டிவருவதாகத் தெரிகிறது.

மீனும்:—அப்படி யொன்றுமில்லையே. ஏதேனும் விசேஷமிருந்தால் உங்களிடம் சொல்லாமலிருப்பேனு? நீங்கள் வீணாக என்மீது எவ்வித சந்தேகமும் வைத்துக்கொள்ளாதீர்கள்.

கற்பக:—இல்லை. அப்படி ஒன்றும் பொய்ச்சந்தேகத்தை நாங்கள் வைத்துக்கொள்ளவில்லை. உன் உடல் மட்டும் இங்கும் உயிர் அங்குமா யிருக்கக்கூடியவகையில் உன் உயிரையே கொள்ளைகொண்ட விஷயம் ஏதேனும்பரிதிபுரத்தில் இருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது.

மீனும்:—(வெட்கத்துடன் தலைகுனிந்தவண்ணம்) ஆஹா! நீங்கள் இப்படி சந்தேகப்படுவதற்குக் காரணமென்ன? நீங்கள் சொல்வதை ருஜுப்பிக்க உங்களால் முடியுமா?

கற்பக:—ஆம்! உன்னை சமுத்திரத்தினின்றும் காப்பாற்றிய கனவானுக்கு உன் உயிர் சொந்தமல்லவா? ஆதலின் நீ அவனுடனேயே இருக்கக் கடமைப்பட்டிருக்கிறாய். எனினும் நீ நினைப்பதுபோல விவாகம் செய்துகொள்ளாமல் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்துவிடுவது சரியல்ல.

மீனும்:—இப்போது எனக்குத் தெரிந்துவிட்டது. நீங்கள் என் பெட்டியைத்திறந்து அதில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கடிதத்தைப் படித்திருக்கிறீர்கள். நான் அதில் எழுதியிருக்கும் சில விஷயங்களை இப்போது நீ அப்படி யப்படியே சொல்லியிருப்பதைப் பார்த்தால் எனக்கு இந்த நிச்சயம் ஏற்படுகிறது.

கற்ப:—சரி! அப்படியே பார்த்ததாகவே வைத்துக்கொள் வோம். அதனால் உன் மனதுக்கு ஏதேனும் ஆயாசம் ஏற்படுமோ? உன் சமாசாரங்களைத் தெரிந்துகொள்ள எங்களுக்கு உரிமை இல்லையா?

மீனும்:—கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டியதே. நானும் வெட்கத்தினால் விஷயத்தைச்சொல்லத் தயங்கினேனே யன்றி ஒரேயடியாக அதை உங்களிடம் என்றைக்காயி னும் சொல்லாமல் மறைத்துவிடமுடியுமா? இப்போது நீங்களாகத் தெரிந்துகொண்டு விட்டதுபற்றி மிகச்சந் தோஷம். விசுவநாதன் என்னைக்காப்பாற்றி யிராவிட் டால் நானும் என் தாயாரைப்போலவே சமுத்திரத் துக்கு இரையாகி இருக்கவேண்டியதுதானே. ஆத லின் என் உயிரைக் காப்பாற்றிய அவர், என்னை மணந்துகொள்ள விரும்பும்போது நான் மறுப்பது நியாயமாகுமா? மேலும் என்னை ஒரு விடுதியில்வைத்து என்தேகம் சௌக்கியமடையும்படி செய்வதற்காக அவர் என்ன பாடுபட்டார் தெரியுமா? இறுதியில் நான் புறப்படவேண்டுமென்று அனுமதி கேட்டபோது அவர் என்னை விட்டுப்பிரிய மனமில்லாமல் கண்ணீர்விட்டார். ஆகவே நான் நன்றாகயோசித்தே அவரையே மணந்து கொள்வதாக வாக்களித்துவிட்டேன்.

கற்ப:—நீ செய்தது சரிதான். இதைத்தான் இறைவனும் விரும்பியிருக்கிறான் எனத் தோன்றுகிறது. இரத்தின

புரியைச்சேர்ந்த நீங்கள் இருவரும் எங்கோ பரிதிபுரத்துக்கருகில் ஒரு சமுத்திரத்தில் அதுவும் ஆபத்தான சமயத்தில் நீங்கள் பரஸ்பரம் சந்திக்கும்படி செய்தது அந்தக் கடவுள்தான். ஆதலின் உன் வாழ்க்கை முழுதும் உன் உயிரைக்காப்பாற்றிய விசுவநாதனுடைய இன்பப் பெருக்கிற்கே பயன்படவேண்டும். அப்போது தான் உன் வாழ்க்கை நியாயமானதாகும். அதற்கென்ன? சுந்தரம்மாளிடம் சொல்லி விவாகத்துக்கு ஏற்பாடு செய்துவிடுவோம். ஆகவே நாம் இதைப்பற்றிப் பேசி முடித்தபின்னர் நாளையதினம் வேறுவிதமாக முடிவான விஷயத்தை நீ அவனுக்கு அறிவித்துவிடு.

மீனம்பாள் கந்தபுரியில் இவ்வாறு வாழ்க்கையை நடத்தி வரும்போது அவளிடம் தணியாக் காதல்கொண்ட விசுவநாதன் பரிதிபுரத்தில் எவ்வாறு காலங்கழிக்கிறான் என்பதைக் கவனிப்போம். மீனம்பாள் அவனைவிட்டுப் பிரிந்ததும் அவன் நேராக பரிதிபுரம்சென்று தன் உத்தியோகத்தை ஒழுங்காகக் கவனித்துவந்தான். ஐந்தாறு தினங்கள் கழிந்தும் அவளிடமிருந்து கடிதம் கிடைக்காததால் அவன் மனம் அதிகம் வருந்தத் தலைப்பட்டது. ஆதலின் அவன் அடிக்கடி பின் வருமாறு சிந்திக்கலானான்:—“ஆஹா! என்ன அழகு! முதல் முறை நான் பரிதிபுரத்துக்குவரும் வழியிலேயே அவளும் அவளது தாயாரும் சாலையோரத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்களே அப்போது உண்மையில் நான் நல்லெண்ணத்துடனேயே உதவிசெய்ய முயன்றேன். காதல் சம்பந்தமான எண்ணமொன்றும் அப்போது தோன்றவில்லை. மீண்டும் படகில் அவர்களைச் சந்தித்தபோது அவர்களிடம் ஒருவகையான வாஞ்சை ஏற்பட்டு அவளை நான் படாதபாடு பட்டு உயிர் தப்பும்படிசெய்து ஒரு விடுதியில்

கொண்டுபோய் வைத்த பின்னரே என்மனம் மாறுதல் அடைந்தது. அவளிடம் காதல் ஏற்படலாயிற்று. நான் இதை மறைத்து வைத்துக்கொள்ளாமல் பகிரங்கமாக அவளிடம் தெரிவித்துவிட்டேனே. அவளும் உண்மையில் என்னிடம் அன்புகொண்டவள்போலல்லவா நடந்துகொண்டாள். இப்போது கடிதமெழுதாது இருப்பதற்குக் காரணமென்ன? இதனால்தான் பெரியோர்கள் மாதர்களின் மனதின் ஆழத்தைக் கண்டுபிடிப்பது அசாத்தியமென்றும், அவர்களை எளிதில் நம்பிவிடக்கூடாதென்றும் சொல்லி யிருக்கிறார்கள் போலும்! சீ! அப்படி ஒன்றுமில்லை. இவ்வாறு ஒரு வர்க்கத்தாரை மட்டும் குறைகூறுவது தவறல்லவா? அதிலும் மீனம்பாள் கள்ளங்கபடமற்றவளென்றும், நற்குணங்களையுடையவளென்றும் அவள் முகம்பார்க்கும்போதே தெரியவில்லையா? போனவிடத்தில் என்ன அசந்தர்ப்பமோ தெரியவில்லை.''

ஒருநாள் காலை விசுவநாதன் நாம் மேற்கூறியவாறு சிந்தித்துக்கொண்டிருந்தபோது தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப்போனான். உடனே அவன் அதை மிக அவசரத்துடன் பிரித்துப்பார்த்தான். மீனம்பாள் எழுதியகடிதமே என்று தெரிந்ததும் அக்கடிதத்துக்கே ஒரு முத்தம் தந்தான். அதைப் பலமுறை திருப்பித்திருப்பிப் படித்தான். எவ்வளவுமுறை படித்தாலும் அதில் இருந்தது இரண்டே வார்த்தைகள். "என் உயிர் தங்களுடையதே. விவாகத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டேன். உடனே புறப்பட்டு வாருங்கள்'' என்பதே அக்கடிதத்தின் சாராம்சம். அவன் அளவிலா ஆனந்தமடைந்தான். தன் அருமை சகோதரியையும், அன்புள்ள காதலியையும், பேருபகாரியான சர்தார் சூரியநாயகத்தையும் காண்பதற்காக இரத்தினபுரி செல்ல ஆயத்தமானான்.

# 186 - வது அத்தியாயம்

ஜகதீஸ்வரி, இரத்தினபுரிக்கடுத்த கிராமப்புற மாளிகையில் பலாத்காரமாக வைக்கப்பட்டு அவள் பலவிதமான சிந்தனைகளில் மூழ்கி ஒரு பைத்தியக்காரியைப்போல் அவஸ்தைப்பட்டுக்கொண் டிருக்கையில், இரத்தினபுரியிலுள்ள பிரேமநாதம் பிரபுவின் மாளிகையில், ஜகதீஸ்வரி மாயமாய் மறைந்துவிட்டது பற்றி ஒரே விசாரமாக இருக்கிறது. பிரேமநாதரின் ஆட்கள் நான்கு திக்குகளிலும் சுற்றிப்பார்த்தும் ஜகதீஸ்வரி அகப்படவில்லை. அவள் போன இடமும் தெரியவில்லை. அன்றிரவு முழுதும் வேலைக்காரர்கள் அம்மாளிகைக்குச் சுற்றிலுமுள்ள கிராமங்கள் பலவற்றிற்குச் சென்று குடிசையிலுள்ள ஜனங்களையெல்லாம் எழுப்பி விசாரித்தார்கள். ஆயினும் பலன் இல்லை. அதற்கடுத்த இரண்டு நாட்களிலும், பிரேமநாதம்பிரபுவும் மதுரைநாயகம்பிரபுவும் அவ்விடத்தைச் சுற்றிப் பல இடங்களிலும் தேடிப்பார்த்தார்கள். அவர்கள் முயற்சியும் பலன் தராமல் வீணாயிற்று. இதனால் அவ்விருபிரபுக்களும், பிரேமநாதரின் மனைவி பங்கஜம்மாளும் துக்கக்கடலில் மூழ்கிவிட்டார்கள். சதா சர்வகாலமும் அதே விசாரமாயிருந்தது. உத்தமகுணசீலி, அழகிற் சிறந்தவள், தங்கள் அன்புள்ள குமரி எங்கேயோ, எப்படியோ காணமற் போய்விட்டாளே என்னும் துக்கமே அவர்களுக்கு அதிகமாயிருந்தது.

அப்பெண்மணி மறைந்துவிட்டதற்கு என்னகாரணம், அவளை யார் தூக்கிக்கொண்டு போயிருப்பார்கள் என்று எவ்விதமான முடிவுக்கும் வரமுடியாத நிலைமையில் அவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு விரோதிகள் யாருமில்லாத

தால் யார்மீதும் குற்றம் சுமத்த அவர்களால் முடியவில்லை. ஆகவே நீண்ட யோசனைக்குப் பின்னர், ஜகதீஸ்வரியின் அழகைக்கண்டு அவள்மீது மோகங்கொண்ட யாரோ அவளைத் தூக்கிக்கொண்டு போய்விட்டிருக்கவேண்டும் என்னும் முடிவுக்கு வரவேண்டியதாயிற்று. அப்படியும் யார் அவள்மீது மோகித்திருப்பார்கள், என்று எவர்மீதேனும் குற்றம் சுமத்தவும் அவர்களால் முடியவில்லை. ஏனெனின், பிரேமநாதம் பிரபு விசேஷமாக எல்லாருடனும் கலந்துகொள்பவரல்லவென்றும், கண்டபடி அனைவரையும் தம் மாளிகையில் சேர்க்கமாட்டாரென்றும், பொறுக்கி யெடுக்கப்பட்ட சில பந்துமித்திரர்களை மட்டுமே அவர் சேர்த்துக்கொள்வது வழக்கமென்றும் முன்னமே க[illegible]ப்பட்டிருக்கிறதல்லவா? ஆதலின் யார்மீதும் அவ்வாறு அபாண்டமான சந்தேகம்கொள்ளவும் காரணமில்லை. எவ்வளவு முயற்சித்தும் ஜகதீஸ்வரி அகப்படாமல் போனதுபற்றி அனைவரும் துக்கித்தனர். பங்கஜம்மாளின் துயரத்துக்கோ அளவேயில்லை. பிரேமநாதம் பிரபுவின் மாளிகைக்கு அடிக்கடி வரக்கூடிய ஜனங்களில் ஒருவராவது ஜகதீஸ்வரியின்மீது தவறான பார்வை செலுத்தியதில்லை. ஆகவே அவள் எங்கு, யாரால் கொண்டுபோகப்பட்டிருக்கவேண்டுமென்பது பெரிய மர்மமாகவே இருந்தது. அவள் அதிக அபாயத்தில் சிக்கிக்கொண்டிருப்பாளென்றும் அவர்கள் கருதினார்கள்.

ஜகதீஸ்வரி மறைந்தது முதல் இரண்டு நாட்கள்வரை பிரேமநாதம்பிரபுவும், மதுரைநாயகமும் சேர்ந்துகொண்டு இராப்பகலாக அவளைத் தேடினார்கள். அவள் அகப்படாமற் போகவே மூன்றாம்நாள் இருவருமாக யோசித்து அருகிலிருந்த ஒரு நீதிபதியிடம் அதைப்பற்றித் தெரிவித்துக் கொண்டார்கள். அவர் எல்லா சந்தர்ப்பங்களையும் ஆலோசித்துப்பார்த்து அதற்குமேல் என்ன செய்வதென்று தோன்றா

மல் கடைசியாக இரத்தினபுரியில் பெயர்பெற்ற துப்பறியும் செல்வநாதன் என்று ஒருவன் இருப்பதாகவும், அவனிடம் இதை ஒப்புவித்துவிட்டால் அவன் எப்படியாவது கண்டு பிடித்து விடுவானென்றும் கூறினர். மதுரைநாயகம் பிரபுவுக்கு செல்வநாதன் நேரில் தெரியுமென்பதும், அவன் தன் தந்தை மாயமாய் மறைந்துபோன விவரத்தை அவன் மூலமாகவே அறிந்தானென்பதும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். ஆகவே தான் இரத்தினபுரியின் அப்பாகத்துக்குச் சென்று செல்வநாதனை அழைத்து வருவதாகச் சொன்னன். பிறகு அவர்களிருவரும் தங்கள் மாளிகைக்குச்சென்று ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டார்கள். மதுரைநாயகம் புறப்படுமுன் இரத்தினபுரிக்குச் செல்லுமுன், ஜகதீஸ்வரி காணுமற்போன விஷயத்தை அரசமாளிகைக்குச் சென்று இளவாசரிடமும் தெரிவிக்கலாமா என்று பிரேமநாதம் பிரபுவைக் கேட்டான். அதற்கு அவர், இவ்விஷயத்தைப்பற்றி இளவாசரிடம் சொல்வதால் ஏதும் பயன் விளையாதென்றும், தாங்கள் இப்போது செய்துகொண்டிருப்பதைவிட அதிகமாக ஒன்றும் இளவாசரால் செய்துவிடமுடியாதென்றும், செல்வநாதன் வரவேண்டியது மிக அவசரமாக இருப்பதால் மதுரைநாயகம் இளவாசரைக்காணச் செல்வதில் அவர்கள் திரும்பிவரக் காலதாமதமாகுமேயென்று தான் அஞ்சுவதாகவும் கூறினர். பிரேமநாதம்பிரபு கூறியதைச் சரியென ஒப்புக்கொண்ட மதுரைநாயகம் உடனே வண்டியிலேறி இரத்தினபுரிக்குப் புறப்பட்டான்.

அவன் செல்வநாதனின் வீட்டுக்குப்போய்ச் சேரும்போது பகலுக்குமேல் அதிக நேரமாய்விட்டது. ஆகவே செல்வநாதன் அப்போதுதான் தன் வேலைகள் பலவற்றை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்து ஆகாரம் அருந்த உட்

கார்ந்திருந்தான். ஆயினும் மதுரைநாயகம் தான்வந்த விவர முழுதையும் அவனிடம் விளக்கமாகச் சொன்னதும் செல்வ நாதன் தன் ஆகாரத்தையும் சரியாக உட்கொள்ளாமல் பாதி யிலேயே விட்டுவிட்டு அவசரமாக எழுந்து மதுரைநாயகத் துடன் அதே வண்டியில் புறப்பட்டான். அன்றிரவு நடுராத் திரியில் அவர்களிருவரும் பிரேமநாதம்பிரபுவின் மாளிகையை அடைந்தார்கள். சிலமணி நேரம் ஓய்வெடுத்துக்கொண்டதும் உடனே துப்பறியும் செல்வநாதன் மதுரைநாயகத்தை எழுப் பித் தனக்கு வேண்டிய தகவல் சிலவற்றைக் கூறும்படிகேட் டான். ஜகதீஸ்வரி காணுமற்போன தினத்தன்று மாலே காத லர்களிருவரும் சமுத்திர ஓரமாய்ப் போய்க்கொண்டிருந்த போது, “ஐயோ பிரேமநாதம்பிரபு கிணற்றில் விழுந்துவிட் டார்” எனப் பொய்ச்சத்தம்போட்ட தொழிலாளி அணிந் திருந்த உடையைப்பற்றிய முழுவிவரத்தையும் அறிந்து கொண்டான். மேலும் ஜகதீஸ்வரி எப்படி இருப்பாள். அவள் மறையும்போது எப்படிப்பட்ட உடையை அணிந்திருந்தாள் என்னும் முழுவிவரத்தையும் நன்றாக விசாரித்துக்கொண் டான். இவ்வளவு தகவல்களையும் அறிந்துகொண்ட பின்னர் அக்கயிற்றையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அப் போது பிரேமநாதம்பிரபுவும், மதுரைநாயகமும் சேர்ந்து கொண்டு தேவையாயின் ஏதேனும் ஒருநாளை அவனுடன் அனுப்புவதாகச் சொன்னர்கள். ஆனால் அவன், தான் தனியே சென்றால்தான் தனக்கு சௌகரியமாக இருக்கு மென்றும், இரகசியமாகத் துப்பறியும் விஷயத்தில் வேண் டியபோது பலரின் துணையைப் பெற்றுக்கொள்ளலாமே தவிர சாதாரண சமயங்களில் தனியே இருப்பதுதான் சிலாக்கியமென்றும் கூறிவிட்டான்.

ஜகதீஸ்வரியும், காமாட்சியும் கடைசியாகப் பேசிக் கொண்டிருந்த தினத்தின் மாலையில் இரத்தினபுரி ராஜமாளி

கையில் நடக்கும் மற்ருெரு விஷயத்தை நாம் இப்போது கவ
னிப்போம். அன்று இரவு சுமார் பத்துமணிக்கு இளவரசர்
தனது அறையில் தனியாக உட்கார்ந்திருந்தபோது கெளரி
வந்திருப்பதாகச் சொல்லி அவரது சேவகன் அவளை அவ
ரிடம் கொண்டுபோய்விட்டான். சேவகன் வெளியே சென்ற
தும், இளவரசன், "ஆ! எனக்கு இன்பத்தை அளிக்கப்
போகும் வேலையில் உற்சாகமாக வேலைசெய்யும் மாதே!
உன் உழைப்பின் பயனுக நீ முடித்த காரியத்தைப்பற்றி
என்னிடம் சொல்லவந்திருக்கிருய் போலும்! நீ இரண்டு
மூன்று தினங்களுக்குமுன் நமது இரத்தினபுரிக்கு அடுத்த
கிராமப்புறத்திலிருந்து, மதனவல்லிக்குப் பதிலாக எனது
அரண்மனையில் வந்திருந்து அம்மதனவல்லி எனக்களித்தது
போன்ற இன்பத்தை அளிக்கக்கூடிய சகல குணுதிசயங்க
ளும் பொருந்திய ஒரு யௌவனமாதை நீ எப்படியோ
கொண்டு வந்து அங்கு மாளிகையில் வைத்திருப்பதாக
எழுதியிருந்த கடிதம் கிடைத்தது. அப்பெண்மணி அம்மாளி
கையில் திருப்தியாக இருக்கிருளா? நான் அவளைப் பார்த்த
மாத்திரத்தில் அவள் ஓடிவிடாமல் என்னுடன் சரசசல்லாப
மாகப்பேசி எனக்குவேண்டிய இன்ப நுகர்ச்சியை அளிப்
பாளா?" என்று கேட்டான்.

கௌரி:—இளவரசே! தாங்கள் அக்கன்னிகையைப் பார்த்
ததும் அவளது ஒப்பற்ற ரூபலாவண்யத்தையும், மிக்க
அழகையும் கண்டு அளவிலா ஆச்சர்யமடைவீர் என்
பது திண்ணம். நான் தங்களுக்கு எழுதியகடிதம்
வேறு எவருடைய கையிலேனும் அகப்பட்டுவிட்டால்
என்னசெய்வதென்னும் அச்சத்துடன் மிகப் பக்குவ
மான பதப்பிரயோகங்களால் எழுதி யிருப்பதுடன்
சுருக்கமாகவும் எழுதியிருந்தேன். ஆகவே அவ்வினிய

பெண்மணியின் அழகைப்பற்றியும் ரூபலாவண்யத்தைப் பற்றியும் அதிகம் விவரித்துரைக்க முடியவில்லை. அவள் ஒப்புயர்வற்ற ரூபவதியாக இருப்பதுடன் சிறிதும் சந்தேகமில்லாத வகையில் பரிசுத்தமானவளாயும், வேறு மனிதர்களின் காற்றுகூட படாதவளாயும் இருக்கின்ருள் என்பது உறுதி. அவள் மிகச் சிறந்த அந்தஸ்திலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவளேயென்ருலும் நவீன முறைகள் ஒன்றும் தெரியாதவளாயும் கள்ளங் கபடமற்றவளாயும் இருக்கிருள். அதிகமான ஜனங்களுடன் அவள் நெருங்கிப் பழகியதில்லை.

இளவரசர்:—கௌரி! நீ அவளைப்பற்றி வருணிப்பது சத்தியமாகவே மனதைக்கவரக்கூடியதாக இருக்கிறது. அவள் உண்மையிலேயே என் இருதயத்தைக் கொள்ளை கொண்ட மதனவல்லியைப்போல் அழகுடையவளாயிருக்கிருளா?

கௌரி:—நாங்கள் தங்களுக்காக வேட்டையாடிக்கொண்டு வந்திருக்கும் அப்பெண்கள் திலகம், மதனவல்லியைப் போல் நேர்த்தியான தோற்றமுடையவளாயும், அவ்வளவு பிரகாசமான பார்வையுடையவளாகவும் இல்லாவிட்டாலும், இதர சில குணநிசயங்களிலும், அம்சங்களிலும் அவள் ஒப்புயர்வற்றவளாக இருக்கிருள். தாங்கள் அவளைப் பார்த்தமாத்திரத்தில் அவள் மோகவலையில் சிக்கிக்கொள்வீர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அதுவும் எக்காலத்திலும் அவளைவிட்டுப் பிரிய மனமில்லாதபடி அவ்வளவு ஆர்வம் அவளிடம் கொள்வீர் என்பது நிச்சயம்.

இள:—கௌரி! நீ அவளைப்பற்றி மிதமிஞ்சி சொல்லிவிடுகிருயோ என்று அஞ்சுகிறேன். இப்போது நீ அவ

ளைப்பற்றிச் சொல்வதைக் கேட்கும்போதே அவளைப் பாராமலும் அவளிடம் எனக்கு ஒருவிதமான விரக தாபம் உண்டாகின்றது. ஆனால் இப்போது நீ கூறுவ தெல்லாம் வெறும் தந்திரமாயிருக்குமோ என்று சந் தேகப்படுகிறேன். அப்படி சந்தேகப்படாமல் இருப்ப தற்கு என்ன ருஜு இருக்கிறது. நீயும், இவ்விஷயத் தில் உனக்குத் துணைபுரியும் உலகாம்பாளென்னும் உலக நாயகிச் சீமாட்டியும் சேர்ந்து ஏதோ ஒரு சாதாரண பெண்ணையே பிடித்து, இவ்வாறெல்லாம் நடந்துகொள் ளும்படி கற்பித்திருப்பீர்களோ என்று நான் சந்தேகம் கொள்ளாமலிருப்பதற்கு என்ன அத்தாட்சி இருக் கிறது.

கௌரி:—இளவரசரே! நாங்கள் உங்களுக்காகத் தயாரித் திருக்கும் பெண்மணியைக் கண்டமாத்திரத்தில் நீங் கள் இப்போது கொண்டுள்ள சந்தேகங்களையெல்லாம் ஒழித்துவிடுவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்பு கிறேன். மேலும் உங்களுக்குத் திருப்தியும், உங்கள் வேலையில் வெற்றியும் ஏற்பட்டபிறகே நீங்கள் எனக் குச் சன்மானமளிக்கலாம். அதுவரை நான் ஒரு பைசா வும் கேட்கமாட்டேன். இந்த உறுதிமொழி உங்களுக் குப் போதாதா?

இள:—சரிதான்! இப்போது நீ கூறிய உறுதிமொழி ஒப்புக் கொள்ளத்தக்கதே. ஆனால் இப்போது நீ தயவுசெய்து அம்மங்கையின் பெயரைக்கூறு. எனக்கு நீ இதற்கு முன் எழுதியகடிதத்தில் அவளுடைய பெயரைக்குறிப் பிடவில்லை யென்பது உன் ஞாபகத்தில் இருக்கு மென்றே நினைக்கிறேன்.

கௌரி:—ஆம்; நான் அக்கடிதத்தில் அவள் பெயரை வேண்டு மென்றே குறிப்பிடவில்லை. ஜாக்கிரதையாய் இருக்க

வேண்டி யிருக்கிறதல்லவா? இப்போதும் உங்களுக்கு அவள் விஷயத்தில் அவ்வளவு சந்தேகம் ஏற்பட்டிருப் பதால் அப்பெயரைச் சொல்லமுடியாது.

இள:—இப்போதுதான் நான் அந்த சந்தேகத்தை விட்டுவிட் டேனே. முதலில் நான் சந்தேகங்கொண்டதும், அதை உன்னிடம் தெரிவித்ததும் முட்டாள்தனமே. வீண் சந்தேகங்கொள்வதற்காக நான் பலவித கஷ்டங்களை அனுபவிக்க விரும்பவில்லை. இப்போதாவது அவள் யார் என்பதைச் சொல்.

கௌரி:—ஐயா! தயவுசெய்து மிதமிஞ்சிய உங்கள் ஆர்வத் தைச் சிறிது அடக்கிக்கொள்ளுங்கள். அவ்வழகிய பெண்ணைத் தாங்களே நேரில் பார்க்கும்வரையில் அவ ளைப்பற்றி ஒரு விஷயமும் கேட்காதீர்கள். நானும் உலகாம்பாளுமாகச் சேர்ந்து, நீங்கள் முதலில் அவளைப் பார்க்கிறவரையில் அவளைப்பற்றி ஒன்றும் சொல்வ தில்லை என்று நிச்சயித்திருக்கிறோம். நீங்கள் ஒரு பெண்ணின் முகத்தைக் கண்டதும் அவளுடைய உள் வயணங்களையெல்லாம் தெரிந்துகொள்ளக்கூடிய ஆற் றல் உடையவராகையால், அங்குவந்து அப்பெண்ணைப் பார்த்ததும், இப்போது நான் அவளுடைய பரிசுத்தத் தையும் அறியாமையையும் பற்றிக் கூறியதெல்லாம் மெய்யே என்று நீங்கள் தெரிந்துகொள்வீர்களென் னும் நிச்சய நம்பிக்கையுடன் நாங்கள் இருக்கிறோம். அப்பெண்ணின் அழகைப்பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை. அவ் விஷயத்திலும் நான் இப்போது கூறியதை மறுக்க உங்களால் முடியாதென்பது திண்ணம்.

இள:—சரி, அப்படியானல் உன் இஷ்டப்படியே நடக்கட் டும். நான் இனி ஒன்றும் கேட்பதில்லை. ஆனல் என்

ளைப்பற்றி அவளுக்கு ஏதேனும் தெரியுமா என்பதை யாவது சொல்லக்கூடுமா?

கௌரி:—அவள் உங்களை நேரில் பார்த்திருக்கிறாளோ இல்லையோ என்பதைச் சொல்ல என்னால் முடியாது. ஆயினும் அவளும் அவளுடைய பந்துக்களுடன் இரத்தினபுரியிலேயே பிரபுக்கள் குடும்பத்திலேயே வசித்தவளாதலால் உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் அவள் உங்கள் மாளிகைக்கோ அல்லது தனி அறைக்கோ வந்திருக்கமாட்டாள் என்பது மட்டும் நிச்சயம். மேலும் நான் அப்பெண்ணிடம் உங்கள் பெயரைப் பிரஸ்தாபிக்கக்கூடாதென்று நீங்களே கட்டளையிட்டிருக்கிறீர்கள்லவா? எனினும் இன்றுகாலை உலகாம்பாள் அவளுடன் பேசி அவளை வழிக்குக் கொண்டுவர முயன்றபோது இரண்டு மூன்றுமணிநேர யோசனைக்குப் பின்னர், அவள் சரியான விஷயத்தையே யூகித்தறிந்திருக்கிறாள் என்றே அவள் பேசியதிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. மேலும் அவள் நமது வழிக்குத் திரும்பியும்விட்டாள்.

இள:—அப்படியானால் என்னுடன் சம்பந்தப்படவேண்டியதுதான் அவளுடைய விதி என்று அவள் உணர்ந்திருக்கிறாளோ?

கௌரி:—நாளை பகல் தன்னைவந்து காணப்போகிற ஆள் இளவரசராகிய தாங்கள்தான் என்பதை அவள் நன்கு அறிந்திருக்கிறாள். அவ்வளவுதான் என்னாலும் சொல்ல முடியும்.

இள:—இவ்வளவு அவசரமா? இப்போதுதான் நீ சொல்லிவிட்டு நாளையபகல் நான் அங்கிருக்க வேண்டுமென்றால் எப்படிமுடியும்? அந்த இடம் இங்கிருந்து சுமார் இரு

பதுமைல் தூரமில்லையா? அவ்வளவு தூரத்துக்கு இவ்வளவு சீக்கிரம் வரமுடியுமா?

கௌரி:—ஆம்; சிறிதுதூரம்தான். ஆயினும் ரஸ்தா மிக ஒழுங்காக இருக்கிறது. பிரயாணம் செய்வது கஷ்டமில்லை. நான் இன்று மாலை 5-மணிக்கு அங்கிருந்து புறப்பட்டேன். இதோ 9-மணிக்கெல்லாம் தங்கள் மாளிகைக்கு வந்து சேர்ந்துவிட்டேன். ஆனால் அப்போது தாங்கள் பலபேருடன் பேசிக்கொண்டிருப்பதாகவும், 10-மணிக்குத்தான் தனியாக இருப்பீர்களென்றும் தெரிந்ததால் அதுவரை காத்திருந்து இப்போது உங்கள் பேட்டியைக் கண்டேன்.

இள:—சரி; அந்த விவரமெல்லாம் எனக்கு வேண்டாம். நாளையதினம் நமது அப்பெண்மணி என்னைக் காண வேண்டியதாயிருக்கும் என்று தெரிந்துகொண்டபோது என்ன சொன்னாள். அதில் அவள் திருப்தியாயிருக்கிறாளா?

கௌரி:—இல்லை. அவள் மிகவும் பரிசுத்தமானவளும், கற்புடையவளுமல்லவா? இப்படிப்பட்ட விஷயத்தில் அவளுக்குத் திருப்தியிருக்குமா? ஆயினும் தங்கள் பேரைக் கேட்டமாத்திரத்திலும், அவள் தங்களுடைய காதலியாக வேண்டுமென்று தெரிந்துகொண்டபோதும் அவள் மனங்கலங்கினாள் என்றும், ஆனால் தாங்கள் வரும்போது தன் மனதிலுள்ள எல்லா எண்ணங்களையும் தங்களிடம் சொல்லி ஒழுங்காக நடந்துகொள்வதாக வாக்களித்திருக்கிறாளென்றும் தெரிகிறது.

இள:—அப்பெண்மணி இவ்வாறு பேசியதிலிருந்து உலகநாயகிச் சீமாட்டி அவளைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

கௌரி:—அதுதான். நாளையதினம் தாங்கள் அவளைச் சந்திக்கும்போது அவளுடைய கற்பையும் பரிசுத்தத்தையும் கெடுக்கவேண்டாமென்று அவள் தங்களைக் கேட்டுக்கொள்ளப்போகும் காட்சி மிக்க பரிதாபகரமானதாயிருக்கப்போகிறது. அவள் தங்கள் தயவுக்குக் காத்திருந்து தங்களை அதிகம் பிரார்த்தித்துக் கொள்வாள். அவள் தன்னாலியன்ற முயற்சியையெல்லாம் செய்து உங்கள் காமவலையினின்றும் விலகிக்கொள்ள முயன்று பிறகு முடியாதென்று தெரிந்த பின்னரே சிறிது சிறிதாக வழிக்குவருவாள்.

இள:—ஆ! அப்படியானால் அது வேடிக்கையாகவே இருக்கும். நான் அவளைக்காண மிகவும் ஆசைப்படுகிறேன். ஆனால் இப்போது நீங்கள் செய்துவரும் காரியம் எப்படிப்பட்ட ஆபத்திலும்போய் முடிந்துவிடாதல்லவா! அவ்விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கிறீர்களா?

கௌரி:—அப்படியா? இத்தகைய விஷயங்களில் எப்போதுமே ஆபத்து இல்லாமலிருக்காது. ஆனால் விஷயம் வெளியாய் விடுமென்றோ வேறு பயமோ எனக்குச் சிறிதும் கிடையாது. மேலும் அவளுடைய பந்துக்கள் எல்லா கட்சியாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் ஒருவித ஒப்பந்தத்துக்கு வருவார்கள் என்றே நான் நம்புகிறேன். இதனால் அவளுடைய கலியாணமும் தடைப்படவேண்டியதில்லை. அவளும் அவளுடைய கணவனும், செல்லப்பப் பிரபு, மதனவல்லியைப் போலவே இவ்வரண்மனையிலேயே வந்து இருந்துவிடலாம்.

இள:—ஓ! நீ எனக்காக எல்லா ஏற்பாடுகளையும் ஒழுங்காகவே செய்துவைத்திருக்கிறாய். இப்போது நாம் இன்

னும் அதிகமாகப் பேசவேண்டியது ஒன்றுமிரா தென்றே நினைக்கிறேன். நாளையதினம் நான் சாதாரண பிரயாணிகள் வண்டியில் புறப்பட்டு பகல்வேளைக்கு அங்குவந்து சேருகிறேன்.

பிறகு கௌரி அங்கிருந்து புறப்பட்டு இரத்தினபுரியி லுள்ள தன் வீட்டிற்குப்போய் இரவு முழுதும் தங்கியிருந்து மறுநாள் அதிக விடியற்காலையில், ஜகதீஸ்வரி வைக்கப்பட் டிருக்கும் நாட்டுப்புற மாளிகைக்குப் புறப்பட்டாள்.

பார்த்தீர்களா? காமாதுரனுகிய ஒரு ஆடவனும், ஒழுக்க மற்றவளும், சிறு பெண்களை மயக்கி அவர்களின் கற்பைக் கெடுப்பதில் முதன்மை வாய்ந்தவளும், இத்தகைய இழி தொழிலையே தனது ஜீவியமாகக்கொண்டவளுமான ஒரு மாதும் சேர்ந்து கேவலம் தனக்குப் பிறந்த ஒரு பெண்ணுட னேயே அவளது தந்தை சம்பந்தம் வைத்துக்கொள்ளும்படி யான நிலைமையைப்பற்றிப் பேசிவருகின்றனர். ஜகதீஸ்வரி, இளவரசருக்குப் பிறந்தவளென்பது கௌரிக்குத் தெரியாது. அங்கே தனக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் பெண் தனது காதலியாகிய பத்மாவதியின் குமாரி ஜகதீஸ்வரி என் பதும் இளவரசருக்குத் தெரியாது. ஆயினும் இத்தகைய சம்பந்தத்தை ஆண்டவன் தடுத்துவிடுவான் என்பது நிச் சயம். கேவலம் மானிடர்களாகிய நாம், மிருக ஜாதிகளைவிட உயர்வானவர்களென்று கூறிக்கொள்கிறோம். 'அரிது அரிது மானிடராதலரிது' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப் படிப்பட்ட ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நம்மிலும் பலர் மிருகங்களைவிடக் கேவலமாக நடந்துகொள்வது வருந் தத்தக்கதே. தான் தெய்வசாட்சியாக அல்லது பலபேரறிய விவாகம் செய்துகொண்ட மனைவி தவிர மற்ற மாதர்களை யெல்லாம் சகோதரிகளைப்போலும், தாய்மார்களைப்போலும்

கவனிக்கவேண்டுமென்பது மதசித்தாந்தம். ஆகவே 'பாகாரி சகோதரன்' என்னும் உயர்வு சொல்லப்படுகிறது. அப்படி யிருந்தும் காமசாஸ்திரத்தில் விற்பன்னர்களாக இருக்கும் தற்கால ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சின் முடிவாக எல்லா தேசங்களிலும் எல்லா ஜாதிமதத்தினரிடையிலும் எப் படிப்பட்ட பந்துத்வமுடையவர்களிலும் ஆண் பெண் சம்பந் தம் ஏற்பட்டுவிடுகிறதென்றும், தன்னைப்பெற்ற தாயினிடம் மகனுடைய சம்பந்தம் ஒன்று ஏற்படவில்லையே தவிர மற் றெல்லாவகையான உறவு முறையிலும் சம்பந்தம் எப்படியோ ஏற்பட்டுவிடுகிறதென்றும் கூறுகிறார்கள். இது மானிட உல கத்துக்கே இழிவைத்தருவதாகும். ஆனால் இப்படிப்பட்ட அயோக்கியர்கள் விரல்விட்டு எண்ணிவிடக் கூடியவகையில் மிகச் சிலராகவே இருப்பர்.

இதற்கிடையில் ஜகதீஸ்வரி காணாமற்போன நான்கா வதுநாள் காலை அவளைத் தேடுவதற்காகப் புறப்பட்ட துப் பறிவதில் பிரசித்திபெற்றவனான செல்வநாதன், பிரேமநாதம் பிரபுவின் மாளிகை இருந்த இடத்தைச் சுற்றிலும், அதற்கப் பால் வெகுதூரம் வரையிலும், சந்தித்த எல்லாரையும் பல விதமான கேள்விகளையெல்லாம் கேட்டு ஏதேனும் சிறிதா வது உளவு அகப்படுமா என்று பார்த்தான். ஒன்றும் அகப் படவில்லை. கடைசியில் ஜகதீஸ்வரி காணாமற்போன அன்று மாலை அவளும், அவளது காதலனாகிய மதுரைநாயகம்பிரபு வும் சமுத்திரக்கரையோரத்தில் எங்கு நின்றிருந்தார்களோ அங்கிருந்துபோகும் ஒரு பெரிய ரஸ்தாவின்வழியே சென்று, ரஸ்தா திரும்புமிடங்களெல்லாம் கைகாட்டிமரம் அமைத் திருப்பதன் பக்கத்தில் காவல்காக்கும் ஆட்களை விசாரித்துக் கொண்டேபோனான். இப்படிச் சென்றதில் ஏழெட்டு மைல் களுக்கு அப்பால் இருந்த ஒரு காவல்காரன், செல்வநாதன் குறிப்பிட்ட இரவு சுமார் பத்துமணிக்கு அவ்வழியே நான்கு

குதிரைபூட்டிய ஒரு பெட்டி வண்டி அதிவேகமாகச் சென்ற தாகவும், அதை இருவர் செலுத்திச் சென்றதுடன் மற்ெருரு ஆள் பெட்டியின்மீது உட்கார்ந்திருந்தானென்றும், தன் அறையிலிருந்த விளக்கு வெளிச்சத்தினின்றும் பார்த்த தில் அவ்வண்டியில் ஏதோ ஒரு அழகியபெண் இருந்ததை யும், அப்பெண் மிகுந்த கவலையுடனும் அச்சத்துடனும் இருந்ததையும் தான் கண்டதாகவும், ஆனல் வண்டியின் நிறத்தைத் தான் கவனிக்கவில்லையென்றும், இதற்குமேல் சொல்லத் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் கூறிவிட் டான்.

இதைக்கேட்ட செல்வநாதன் தனக்குச் சிறிது உளவு அகப்பட்டதென்றும், அக்காவல்காரன் குறிப்பிட்ட அப் பெண் ஜகதீஸ்வரியாகவே இருக்கவேண்டுமென்றும் தெரிந்து கொண்டு அதே ரஸ்தாவில், இன்னும் சிறிது தூரம் சென்று அங்குள்ள ஒரு காவல்காரனைக்கேட்டான். அவனும் அவ் வாறே சொன்னன். இவ்வாறுகச் சுமார் இருபது மைல் தூரம் வந்துவிட்டான். ஆனல் பின்னர் அந்தவண்டி எங்கு போயிற்று என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அது வேறு குறுக்குவழியில் எங்கேயோ புகுந்துவிட்டிருக்கிறது. ஆகவே அவன் அந்த இடத்தைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொரு கிராமத் துக்கும் சென்று பலரையும் பக்குவமாக விசாரித்தான். மேலும் ஜகதீஸ்வரியை அடித்துக்கொண்டு போகும்போது அந்த ஆட்கள் மதுரைநாயகம்பிரபுவை மரத்தில் கட்டிப் போட்ட கயிற்றை செல்வநாதன் வைத்துக்கொண்டிருந்தா னல்லவா? அதேமாதிரி கயிறு எங்கேனும் கிடைக்குமா என்று விசாரித்ததில் அக்கயிறு விற்கப்படும் கடை ஒன் றைக் கண்டுபிடித்தான். அக்கடைக்காரனைப் பார்த்து அவ னிடம் அக்கயிற்றை வாங்கியவன் யாரென்று கேட்டதில்

அவனுக்கு வாங்கியவனுடைய ஊர், பெயர் தெரியவில்லை யென்றாலும் அந்த ஆள் அணிந்திருந்த உடையையும் அவனுடைய தோற்றத்தையும் கூறினான். இதிலிருந்து அதை வாங்கியவன், அன்று, "பிரேமநாதம்பிரபு கிணற்றில் விழுந்து விட்டார்" என்று பொய்க்கூச்சல்போட்ட அதே மனிதன் என்று தெரிந்தது. மற்றும் அதைப்பற்றி மேற்கொண்டு விசாரித்துச் சென்றதில் அந்த ஆள் அவ்விடத்திற்குச் சமீபத்திலுள்ள ஏதேனும் கிராமப்புற மாளிகைக்குச் சொந்தக்காரர்களின் சேவகனாக யிருக்கவேண்டும் என்று தெரிந்துகொண்டான்.

பிறகு செல்வநாதன் படிப்படியாக விசாரித்துக்கொண்டே, அவனுடைய தந்திர சாமர்த்தியங்களையெல்லாம் செய்து பார்த்ததில் இறுதியாக ஜகதீஸ்வரி கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கும் மாளிகை இன்னதென்று தெரிந்து கொண்டுவிட்டான். ஆயினும் அவன் அவசரப்பட்டு அம் மாளிகையில் புகுந்து ஒன்றும் செய்துவிடாமல் விஷயம் வெளியானதும் வந்தவழியே திரும்பி பிரேமநாதம்பிரபுவின் மாளிகைக்குச் சென்றான். செல்வநாதன் புறப்பட்டு மூன்று தினங்களாய்விட்டன. ஆகவே ஜகதீஸ்வரி காணமற் போனதற்கு எட்டாவது தினத்தில் செல்வநாதன் அவள் இருக்குமிடம் இன்னதெனத் தெரிந்து கொண்டுவந்து அதைப் பிரேமநாதம் பிரபுவிடம் அறிவித்தான். உடனே இத்தகவல் மதுரைநாயகம் பிரபுவுக்கும் அறிவிக்கப்பட்டது. பிரேமநாதம்பிரபுவின் கட்டளையின்மீது அந்த இடத்துக்குப் புறப்படவண்டியும் தயாராயிற்று. செல்வநாதன், பிரேமநாதம் பிரபு, மதுரைநாயகம் ஆகிய மூவரும் அதில் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். பிரேமநாதம்பிரபுவின் மாளிகையிலிருந்து ஜகதீஸ்வரி வைக்கப்பட்டிருக்குமக்கட்டடம் சுமார் பதினறு

மைல் தூரமிருந்தது. அவர்கள் புறப்பட்ட குதிரை அதிவேக மாக ஓடக்கூடியதாதலின் ஒன்றரைமணி நேரத்துக்குள் அவர்கள் அவ்விடம்போய்ச் சேர்ந்தார்கள். மேலும் பிரேம நாதம்பிரபு அப்பிராந்தியங்களில் பஞ்சாயத்து சபையில் ஒரு அங்கத்தினராக இருந்தபடியால் தன் காரியத்தைச் சாதித் துக் கொள்வதில் தன் செல்வாக்கை உபயோகிக்கச் சௌக ரியமாயிருந்தது. எதிர்ப்பு இல்லாமல் அங்குள்ள பலருமே பிரபுவுக்குத் துணைபுரிந்தார்கள்.

ஜகதீஸ்வரியைத் தேடுவதற்காக பிரேமநாதம் பிரபுவும், மதுரைநாயகமும் எவ்வளவோ முயன்றும் ஒன்றும் பிரயோ சனப்படாமல்போக செல்வநாதன் மட்டும் அம்முயற்சியில் வெற்றியடைந்ததன் காரணமென்ன? அவனுடைய துப்பறி யும் சக்தியேயாகும். அவன் தனக்குப் பேரும்புகழும் சன் மானமும் கிடைக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் விடாமுயற்சியுடனும் உற்சாகத்துடனும் சாமர்த்தியமாகவும் வேலைசெய்தான். “ஓ! அவர்கள்செய்த வேலையை நாம் ஏன் செய்யக்கூடாது” என்று எதையும் அலட்சியமாகச் சிலர் சொல்லி விடுவார்கள். ஆனால் அது முட்டாள் தனமான பேச்சு என்பதை அவர்கள் அறிவதில்லை. எல்லாரும் எல்லாக் காரியத்தையும் செய்துவிட முடியாது. அவரவர்களும் செய்வதற்குரிய சிற்சில காரியங்கள் இருக்கின்றன.

# 187 - வது அத்தியாயம்

பிரேமநாதம்பிரபு முதலியவர்கள் ஜகதீஸ்வரி அடைபட்டிருக்கும் மாளிகைக்கு வண்டியில் வந்து கொண்டிருக்கும் சமயத்தில் ஜகதீஸ்வரி அம்மாளிகையில் என்ன செய்துகொண்டிருக்கிறாள் என்பதைக் கவனிப்போம். அன்றுதான் காமாட்சியம்மாள் ஏற்பாடு செய்திருக்கிறபடி அவளை ஒரு டாக்டர் சந்திக்கப்போவதா யிருந்தபடியால் அவள் தனது ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு அந்த டாக்டரைச் சந்தித்துப்பேசத் தன்னை ஆயத்தம்செய்து கொண்டிருந்தாள். உண்மையிலேயே அவள் அன்று ஏதோ ஒரு டாக்டரைத் தான் சந்திக்கப்போவதாக நினைத்துக் கொண்டிருந்தாள். அதற்கு முன் நாள் அவள் காமாட்சியம்மாளுடன் பேசியதுமுதல் அவள் தன் அறையைவிட்டு வெளியில் செல்லவேயில்லை. அவளுக்கு வேண்டியவைகளையெல்லாம் வேலைக்காரி கவனித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு நல்ல இனிய ஆகாரத்தைக் கொடுத்தார்கள். ஆயினும் அவளுக்கு அந்த ஆகாரம் சிறிதும் ருசிக்கவேயில்லை என்பதையும் முன்னமே தெரிவித்துள்ளோம். நாம் இதைப் பிரஸ்தாபித்துக்கொண்டிருக்கும் தினத்தின் காலையிலும் நமது ஜகதீஸ்வரி வெறும் தேயிலைப்பானத்தைமட்டும் உட்கொண்டிருந்தாள். ஆகவே அவள் சரியான ஆகாரம் சாப்பிட்டு இருபத்து நான்குமணிநேரம் கடந்திருந்தது.

ஜகதீஸ்வரி சுமார் பன்னிரண்டுமணிக்கு, தன்னை சந்திக்க வரப்போகும் வைத்தியருடன் என்னபேசுவது என்பதுபற்றித் தனக்குள் யோசித்துக்கொண்டிருந்தாள். அந்த ஆள் வந்ததும், தன்னுடைய பெற்றோர்கள் யார்? தன் பிறப்பைப்

பற்றிய இரகசியம் வெளிப்பட்டதுமுதல் தன் மனம் எவ்வளவு பாடுபடுகிறது? தன் தந்தையாகிய இளவரசரின் உருவத்தை மனதில் நினைத்தாலும் எவ்வளவு வெறுப்பும் பீதியும் உண்டாகிறது? என்பனபோன்ற எல்லா விஷயங்களையும் அவரிடம்கூறி அந்த வைத்தியருடன் நல்ல சினேகம் செய்துகொள்வதென்றும் முடிவுசெய்தாள். மேலும் தன்னைச் சந்திக்க வருகிறவர், வயதுசென்ற அனுதாபகுணமுடையவராயிருக்கலாமென்றும், தான் சொல்வதையெல்லாம் கவனத்துடன் கேட்டுத் தனக்கு வேண்டிய உதவிபுரிவாரென்றும் நிச்சயமாக நம்பினாள்.

அப்போது அவள் தனக்குள் பின்வருமாறு கூறிக்கொண்டாள்:—"அந்த வைத்தியரைக் கண்டதும் உடனே என் பெரிய தாயாரையும், அவரது கணவனையும் கண்டுபேசி, என்னை இளவரசர் அவர்களிடமிருந்து பிரித்துத் தன் மாளிகையில் கொண்டுபோய் வைத்துக்கொள்ள முயற்சி செய்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கும்படி சொல்லப்போகிறேன், ஆகவே என் அன்புள்ள பந்துக்கள் என்னை உடனே இங்கிருந்து அழைத்துச் சென்று நான் இளவரசரிடம் அகப்படாதபடி செய்யும்படி கேட்டுக்கொள்வேன். உண்மையிலேயே என்னை சொஸ்தப்படுத்த வேண்டுமென்னும் எண்ணம். அந்த வைத்தியருக்கு இருக்குமாயின், என்னை என் பந்துக்களிடம் விட்டு நான் பழையபடி என் வாழ்க்கையை நடத்தும்படி செய்வதிலேயே அது முடியுமென்றும் அவரிடம் தெரிவித்துவிடுவேன். மேலும் என்னால் சிறிதும் அபிமானிக்க முடியாதவரும், அவருடைய உருவமே எனக்குப் பீதியையும், வெறுப்பையும் தரக்கூடிய நிலைமையில் உள்ளவருமான என் தந்தையாக இளவரசரின் ஆதீனத்தில் என்னைவிட்டால் நான் சிறிதும் மனநிம்மதியை அடைய

முடியாதென்றும் சொல்லிவிடுவேன். நான் என்னசெய்வேன்? நான் பிறப்பதற்கே காரணமாயிருந்த என் தந்தையை நினைக்கும் மாத்திரத்தில் எனக்கு அருவருப்பும் பயங்காமும் உண்டாகிறது. அதற்கு அவருடைய செயலே காரணம்."

ஜகதீஸ்வரி இவ்வாறு சிந்தித்துக்கொண் டிருந்ததால் அவள், தன்னைச் சந்திக்க வரப்போகும் ஆளைக்காண்பதில் எவ்வளவு சந்தோஷமும் உற்சாகமும் உடையவளாக இருந்தாளென்பதை நேயர்கள் அறிந்துகொள்ளலாம். இதற்குக் காரணமென்ன? அந்த சந்திப்பினால் அவளுக்குத் தீமை விளையப்போகிறதென்று அவள் கனவிலும் கருதாததேயாகும். தன்னைக் கெடுக்கும் உத்தேசத்துடனேயே ஒருவர் வரப்போகிறார் என்பதை அவள் எதிர்பார்க்கவேயில்லை. தன்னிடம் அனுதாபம்கொண்ட ஒரு டாக்டரே அங்கு வரப்போகிறார் என்று நிச்சயமாக அவள் நினைத்தாள். அவள் கூடியவிரைவில் அந்த டாக்டரின் உதவியால் தன் பந்துக்களிடம் சேர்ப்பிக்கப்படலாம் என்று நிச்சயமாக நம்பியதால் அவளுக்கு அன்று அதிக உற்சாகமும் சந்தோஷமும் ஏற்பட்டது. அவள் அம்மாளிகைக்குக் கொண்டுவரப்பட்டதுமுதல் ஒருநாளாவது இவ்வாறு திருப்தியுடன் இருந்ததில்லை. அவளுக்கு அவ்வளவு உற்சாகமும் சந்தோஷமும் ஏற்பட்டதற்கு மற்றொரு முக்கிய காரணமுமுண்டு. அதுவும் காதல் சம்பந்தமானதே. அதாவது டாக்டரின் உதவியால் அன்புள்ள பந்துக்கள் வீட்டுக்குச் சென்றுவிட்டால் மீண்டும் தன் காதலனாகிய மதுரைநாயகத்தைக் கண்ணாரக்கண்டு அவனுடன் இருந்து விரைவில் அவனது மனைவியாகவும் போய்விடலாம் என்னும் எண்ணமேயாகும். அந்த எண்ணம் அவள் மனதில் உதயமாகும்போதே அவள் தனக்கும் தெரியாமலே ஒருவித புளகாங்கித உணர்ச்சியை யடைந்தாள்.

அவள் இவ்வாறு நினைத்துக்கொண் டிருக்கும்போது சுமார் ஒருமணிக்கு அம்மாளிகையை அடுத்த தோட்டத்தில் ஒருவண்டி அதிக வேகமாகப் புகுவதை சத்தத்தால் உணர்ந் தாள். ஆகவே அவள் தன் அறையின் ஜன்னல் வழியாகப் பார்த்ததில் சாதாரண வண்டியொன்று அம்மாளிகையின் முன் புறவாயிலில் வந்து நிற்பதைக்கண்டாள். அப்போது அவள் தனக்குள், "ஓஹோ! இதோ டாக்டர் வந்துவிட் டார். நான் மிக ஆவலுடன் எதிர்பார்க்கும் பெரியவர் வந்து இறங்குகிறார்" என்று நினைத்தாளேயொழிய அவரைப்பார்க்க அவள் ஆவல்கொண்டும் முடியவில்லை. ஏனெனின், ஜன்னல் அம்மாதிரி அமைக்கப்பட்டிருந்தது.

அவர் வண்டியைவிட் டிறங்கி பத்துநிமிஷங்கள் ஆய்விட் டன. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகம்போல் ஜகதீஸ் வரிக்குத் தோன்றியது. அவள் ஆவல் அதிகரித்துவிட்டது. வைத்தியரைப் பார்ப்பதால் என்ன ஏற்படுமோ என்பதுபற் றிப் பலவிதமான சந்தேகங்களும் அச்சமும் அவளது மன தில் உதிக்கலாயிற்று. அவர் என்னசெய்வார் என்பதுபற்றி அவள் நினைத்தாளோ அதற்கு மாருக அவர் நடந்துகொண்டு விட்டால் என்ன செய்வது? அவர், அனுதாபமும் அன்பும் இல்லாதவராய்ப் பிடிவாதமும், கொடிய இருதயமும் உடை யவராக இருந்துவிட்டால் என்ன ஆகும்? அவள் மீண்டும் தன் பந்துக்களிடம்போய்ச் சேர்வதிலோ, அல்லது அவ்வி ஷயமாக அவள் சார்பாக வேலைசெய்வதிலோ அவர் மனம் இரங்காவிட்டால் என்ன செய்வது? அதுமட்டுமா? அவளைப் பலாத்காரமாகவேனும் இரத்தினபுரிக்குக் கொண்டுபோய் இளவரசரிடம் விட்டுவிடுவதற்காக அந்த வைத்தியர் வந் திருப்பதாயின் யாது செய்வது என்பனபோன்ற பல சந்தே கங்கள் அவளை வாட்ட ஆரம்பித்தது. இவ்வாறு பலசிந்தனை

கள் அவள் மனதில் தோன்றியதால் சொற்ப நேரத்துக்கு முன் காணப்பட்ட சந்தோஷமும் உற்சாகமும் திடீரென்று மறைந்து மீண்டும் மனக்கோளாறும், கவலையும் அதிகமுடையவளாய் மாறிவிட்டாள்.

ஜகதீஸ்வரி, தன் எதிரில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடியில் தன் முகம் தெரியவே அதைப்பார்த்து, "என்விதி தன்னுடைய கடுமையான வேலையை நடத்தும் காலம் வந்துவிட்டதுபோல் இருக்கிறது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அதே அறையில் மேலுங்கீழுமாக நடந்துகொண்டே இருந்தவள் திடீரென்று கவலையின் மிகுதியால் அங்கிருந்த ஒரு நாற்காலியில் சாய்ந்தாள். பிறகு தனக்கு ஏதோ ஆபத்து நிச்சயமாக ஏற்படப்போகிறதென்றும், அதை எப்படியாவது தடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் யோசித்தாள். அப்படி யோசித்தபோது, தனக்கும் தெரியாமல் ஓவென்று கத்திவிடலாமா என்று நினைத்தாள். ஆனால் மிகச் சாமர்த்தியமாக அவள் அதை அடக்கிக்கொண்டாள்.

இப்படி அவள் மனோவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த போதுதான் இருக்கும் அறையைநோக்கி யாரோ வருவது போன்ற காலடிசத்தம் கேட்டது. உடனே அவள் மனம் கலங்கலாயிற்று. என்னசெய்வதென்று ஒன்றும் தோன்றவில்லை. எனினும் திடீரென்று அவள் தன் ஆசனத்தை விட்டு எழுந்து, 'இப்போது' என்று ஒருவித யோசனையுமில்லாமல் உளறினாள். ஒருகணத்தில் அவள் மனக்கடலில் ஏற்பட்ட சிந்தனைகளென்னும் அலைகளெல்லாம் ஓய்ந்து அவள் மனோநிம்மதியை அடைந்தாள். அதற்குமேல் அவள் ஒன்றும் சிந்திக்கமுடியாதபடி இதற்குள் அந்த அறையின் கதவும் திறக்கப்பட்டது. காமாட்சியம்மாளும், உள்ளேவந்தாள்.

காமாட்சியம்மாள்:—எனது அன்புள்ள குழந்தாய்! இன்று எப்படி இருக்கிறாய். உன்னுடைய மனோநிலைமை எவ்வாறு இருக்கிறது.

ஜகதீஸ்வரி:—நான் எப்படிப்பட்ட மனோபாவமுடையவளாயிருக்கிறேன் என்பதுபற்றி ஏதும் சொல்ல என்னால் மூடியாது. ஆயினும் இப்போது சொற்ப நேரத்துக்கு முன் இம்மாளிகையின் முன்வந்த வண்டி எங்கே? அதைப்பற்றிய சமாசாரமென்ன?

காமா:—அவரைத்தான் நீ இன்று சந்திக்கவேண்டும். உன்னைக் காணவும் உன்னுடன் பல விஷயங்களைப் பேசவுமே அவர் வந்திருக்கிறார்.

ஜக:—அப்படியானால் அவரிடம் உடனே செல்ல எனக்கு அனுமதி கொடுங்கள். ஏனெனின் எவ்வளவு விரைவில் அவரைப் பார்க்கிறேனோ அவ்வளவும் நல்லது தான். அதற்காகத்தான் சொல்கிறேன். அவரைச் சந்திக்க உடனே ஏற்பாடு செய்யுங்கள்.

காமா:—ஆம்; நீ உடனே போகலாம். அதில் எனக்கொரு ஆட்சேபமுமில்லை. ஆனால் நீ மிகப் பொறுமையுடனும், நியாயமாக நடந்துகொள்பவளாகவும் இருக்க வேண்டும்.

அப்போது அவள், "அப்படியே ஆகட்டும். இப்போதும் நான் பொறுமையுடன்தான் இருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே கதவின்பக்கமாகச் சென்றாள். அவள் அவ்வாறு செல்வதால் அவளுடைய நோக்கம் யாதாயிருக்குமென்று தெரிந்துகொள்ள முடியாதவளாய், "நான் உன்னுடன் வரவேண்டுமென்று நீ விரும்பவில்லையா?" என்று கேட்டாள். அதற்கு அவள், "இல்லை, இல்லை. நான் தனி

யாகவே அவரிடம் போகிறேன். அவர் எங்கே இருக்கி ருர்?'' என்று கூறினுள்.

காமா:—நேற்றுகாலே நாம் இருவரும் சேர்ந்து பேசிக்கொண் டிருந்த அறையில்தான் அவர் இருக்கிருர்.

ஜக:—அப்படியாளுல் நான் அங்கே போகிறேன்.

என்று கூறிக்கொண்டே அவள் அவ்வறையை நோக்கிச் சென்ருள். நல்லதா கெட்டதா என்று தெரிந்துகொண்டு விடவேண்டும் என்னும் எண்ணத்துடன் சிலர் பரபரப்பாக நடந்துகொள்வதேபோல்! அவளும் அவரைச் சந்திப்பதால் என்ன நேரிடுகிறதென்பதைத் தெரிந்துகொண்டுவிடவேண் டும் என்னும் எண்ணத்துடன் மிக அவசரமாக அவ்வறைக்கு நடந்தாள்.

அவள் அவ்வறையில் நுழைந்தாள். ஒருவர் அங்கிருந்த ஜன்னலருகில் நின்று வெளிப்புறத்தில் பார்த்துக்கொண் டிருந்தபடியால் அவரது பின்புறமே அவளுக்குத் தெரிந் தது. அவ்வறையின் கதவைத்திறந்த சத்தம் கேட்டதும் அவர் திரும்பிப்பார்த்தார். அப்போது அவள் தன் கையால் அக்கதவைப் பிடித்துக்கொண்டிருந்தாள். ஆ! ஆச்சரியமும் பீதியும் அடைந்தாள். ஏதோ ஒரு புதிய வைத்தியரைப் பார்க்கலாமென எதிர்பார்த்த அவள் தனக்கு மிகவும் பழக்க மான இளவரசர் முகத்தைக்கண்டாள்! அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்?

அவள்மட்டும் அத்தகைய உணர்ச்சியை அடைய வில்லே. அங்கிருந்த இளவாசரும் அதேமாதிரியான மனே பாவத்தை யடைந்து, "ஜகதீஸ்வரி! ஐயோ கடவுளே, ஜக தீஸ்வரி'' என்று கூறினுர். ஆனுல் ஜகதீஸ்வரியின் மனம் என்றுமில்லாத ஒருவிதமான சங்கடத்தை யடைந்துவிட்ட

தால் அவள் தன்னை எதிர்த்துவரும் ஒரு காட்டுமிருகத்தி னின்றும் தப்பித்துக்கொள்ள ஓடுவதேபோல் ஓடலானாள். இளவரசரும் அவளது பின்னால், "ஜகதீஸ்வரி, ஜகதீஸ்வரி!" என்று கத்திக்கொண்டே ஓடலானான். அப்போது அவள், "இல்லை, இல்லை" என்று கதறிக்கொண்டே இறக்கையை யுடையவள்போல் வேகமாக ஓடினாள்.

அவள் அவ்வாறு பீதியடைந்து ஓடுவதைக்கண்ட இள வரசன் மனமுருகி, "ஜகதீஸ்வரி, எனது அன்புள்ள குழந் தாய்! எனதருமை ஜகதீஸ்வரி! ஓடவேண்டாம் என்று உன்னை கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறிக் கொண்டே அவள் பின்னாலேயே ஓடினான். அவள் அவ் வாறு ஓடிக்கொண்டேபோய் மாடியிலிருந்து கீழேபோய்ச் சேர்ந்ததும் இளவரசன் பின்னாலேயே ஓடிவருகிறானா என்று கவனித்தாள். திரும்பிப் பார்த்ததில் அவன் தன் பின்னா லேயே ஓடி வருவதைக்கண்ட அவள் மற்றொரு படிக்கட்டு களின் வழியே மாடிமீது ஓட ஆரம்பித்தாள்.

இளவரசனும், "அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக் கிறது. ஐயோ பாவம்! அவளுக்குப் பைத்தியம்தான் பிடித் திருக்கிறது" என்று கூறிக்கொண்டே அந்த பீதியினால் இன் னும் வேகமாக அவளைத்தொடர்ந்து ஓடலானான். அவ்வளவு வேகமாக ஓடிய ஜகதீஸ்வரி,அம்மாளிகையின் வேலைக்காரிகள் வசிக்கும் பாகத்தை யடைந்ததும் மேலும் ஓடமுடியாமல் சோர்ந்துபோய் வியர்வைசொட்டும் தேகத்துடனும் பீதி யால் வெளுத்துப்போன முகத்துடனும் அங்கே நின்று பெருமூச்சுவிட்டாள். குறைவற்ற அழகையுடைய அவள் முகம் கருத்து விகாரமாக இருந்தது. அப்போதும் தன் னைத் தொடர்ந்து இளவரசர் ஓடிவரும் காலடிசத்தம் கேட் டது. மற்றும் சில நிமிஷங்களில் தன் தந்தையாகிய இளவா சரே மிக சமீபத்தில் வந்துவிட்டதைக் கண்டாள்.

அப்போது அவள் மெய்நடுங்க, அழுகைகுரலுடன், "இல்லை, இல்லை. நீங்கள் என்னை உங்களுடன் அழைத்துக் கொண்டு போகலாகாது. எச்சரிக்கையா யிருக்கும்படி என் தாயின் உருவம் தோன்றி எனக்கு அறிவுறுத்துகின்றது" என்று கத்திக்கொண்டே இன்னும் மேல்மாடிக்கு ஓடலானாள். அதைக்கண்ட இளவரசர், அவள் ஏன் அவ்வாறு பீதியடைந்து பைத்தியக்காரியைப்போல் ஓடுகிறாள் என்பதை அறியமுடியாமலும், அவள் தன் மனக்கோளாறு காரணமாக ஏதேனும் துயரத்தை விளைவித்துக்கொண்டால் என்னசெய்வதென்னும் அச்சத்தாலும் அவள் பின்னால் அவனும் ஓடினான்.

அப்படி ஓடிக்கொண்டே அவன் அவள் சமீபத்தில், அதாவது அவன் பேசினால் அவளுக்குக் கேட்கும் தூரத்தில் இருந்தபோது, "ஜகதீஸ்வரி! என் குழந்தாய்! நீ ஏன் அவ்வாறு பயந்து ஓடுகிறாய். நான் உன்னை எங்கும் எடுத்துச் செல்லமாட்டேன். நீ எதற்கும் அஞ்சவேண்டாம்" என்று கூறினான்.

அப்போதும் அவள் "இல்லை, இல்லை" என்று சொல்லிக்கொண்டே ஓடினாள். அந்த மேல்மாடியின் பின்புறக் கதவு திறக்கப்பட்டிருந்தது. அதுவும் இறங்குவதற்கு வழியோ என்று தவறுதலாக அவள் தன் மயக்கத்தில் நினைத்து அவ்வழியே ஓடவே அவள் அவ்வளவு உயரத்திலிருந்து விழவேண்டியதாயிற்று. அவளைப் பின்தொடர்ந்து வந்து இளவரசர் அவளைக் காணாமல் ஐயோ என்று பரிதவித்தான். அவள் பீதியால் கத்திய சத்தங்களே அவன் செவியில் சதாகேட்டு அவனது மூளையைக் கலக்கிவந்தது.

அதே நேரத்தில் தான் ஜகதீஸ்வரியைக் காண்பதற்காக பிரேமநாதம்பிரபு, செல்வநாதன், மதுரைநாயகம் ஆகியோர்

புறப்பட்ட வண்டியும் அங்கேவந்து சேர்ந்தது. மதுரைநாய கம் ஏதேனும் ஜன்னல்வழியாகவேனும் தன் காதலியாகிய ஜகதீஸ்வரியின் முகத்தைப் பார்க்கலாமா என்று மிக ஆவலு டன் அம்மாளிகையையே பார்த்துக்கொண்டு வந்ததால் அம் மாடியின் பின்புற வாயிலிலிருந்து ஒருபெண் கீழேவிழு வதைக்கண்டான். அது ஜகதீஸ்வரியே என்று அவனுக்குத் தோன்றியது. உடனே அவன் அதை வண்டிலிருந்த மற்ற வர்களிடம் சொல்லவே அனைவருமாக, வண்டியை விட்டுக் குதித்து மிக அவசரமாக அவள்விழுந்த அந்த இடத்துக்குப் போய்ப் பார்த்தார்கள். ஜகதீஸ்வரியின் உருவம்தான். அந்த தேகத்தில் அடியோ, குத்தோ, வெட்டோ ஒன்றுமில்லை. மிக்க அழகுடன் கள்ளங்கபடமற்ற முகம் பிரகாசிக்கின்றது. ஆனால் அதன் தேகத்தில் உயிர்மாத்திரம் இருக்கவில்லை. பிரே தத்தைக்கண்டு துக்கித்தார்கள். அவளுடைய மாணப்படுக் கையும் அவளைப்போன்ற அழகுடைய புஷ்பங்களால் ஆக் கப்பட்டிருந்தது.

# 188 - வது அத்தியாயம்

இப்போது நமது இரத்தினபுரி இரகசியமென்னும் நாவ லின் இரண்டாவது கதை இந்த ஆருவது பாகத் துடன் முடிந்துவிடப்போவதாலும் இதுவே இதன் கடைசி அத்தியாயமாதலாலும் இதுவரையில் இதில் விவரிக்கப்பட்ட விஷயங்களில் எது பூர்த்தியாகாமல் விடப்பட்டிருக்கிறதோ அதையெல்லாம் சுருக்கமாக விவரித்துவிட விரும்புகின்ருேம். ஜாடித்தீவில் வசித்துவந்த தானப்பன் முதலிய துஷ்டர்களின் செயல்களையெல்லாம் நன்கு கவனித்துவந்த துப்பறியும் செல்வநாதன், அவர்களில் ஒருத்தியான நீலாள் என்பவள் கொல்லப்பட்டதில் தானப்பன் முதலிய யாவருமே சம்பந்தப் பட்டிருக்கிருர்களென்று ருஜுப்படுத்தி அவர்களெல்லோருக் கும் மாணதண்டனை கிடைக்கும்படி செய்துவிட்டான். ஆகவே தூக்கிலிடும் வேலையிலிருந்து பலருக்குத் தூக்குப் போட்ட தானப்பன் கடைசியில் தானும் அத்தூக்குமேடை யிலேயே ஏறிச் சாகவேண்டியதாயிற்று. இவ்வாருக செல்வ நாதன் முயற்சியால் இரத்தினபுரி நகருக்கே பெரிய தொல் லையை விளைவித்துவந்த ஜாடித்தீவுக் கூட்டத்தார் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனுர்கள். இதற்குள் அந் நகரத்தின் முனிசிபல் சபையாரும் அத்தீவையே சுத்தமான இடமாக்கி அந்நகர போலீசார் வசிப்பதற்கெனப் பல விடுதி களைக் கட்டி அதில் போலீசார் குடும்பங்களுடன் வசிக்கும் படி செய்துவிட்டனர். இதனுல் ஒருகாலத்தில் பயங்காத்தை அளித்த இடம் பின்னுல் யாவரும் எளிதில் நடமாடக்கூடிய இடமாக மாறிவிட்டது.

மாடிமீது இருந்து கீழேவிழுந்து இறந்த ஜகதீஸ்வரியின் பிரேதம் பிரேமநாதம்பிரபுவின் சமுத்திரக்கரையோர பங்களாவுக்கருகில் ஒரு இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இச்சடங்குக்கு மவர்கள் எத்தகைய ஆடம்பரமும் செய்யவில்லை. அப்பிரேத அடக்கத்துக்குத் தானும் வருவதாக இளவரசர் அனுதாபத்துடன் சொல்லியனுப்பினன். ஆனால் இளவரசர் வந்தால் இறந்துபோன கன்னிகையின் ஆத்மா முதல், அங்குக்கூட விருக்கும் ஜனங்களின் ஆத்மாவரையில் எல்லாருமே கவலையை அடைய நேருமென்றும், அபகீர்த்தியுண்டாகுமென்றும் ஆதலின் வரக்கூடாதென்றும் சொல்லியனுப்பிவிட்டார் பிரேமநாதம்பிரபு. சவ அடக்கச் சடங்கு முடிந்தபின்னர் பிரேமநாதம்பிரபுவும் அவரது மனைவி பங்கஜம்மாளும், தங்கள் அன்புள்ள ஜகதீஸ்வரி இறப்பதற்குக் காரணமாயிருந்த இளவரசர் அதிகாரத்திலிருக்கும்வரை அந்நாட்டிலேயே இல்லாமல் வெளிதேசங்களில் தேசசஞ்சாரம் செய்துகொண்டிருப்பதென்று தீர்மானித்துக்கொண்டு அப்படியே அந்நிய நாடுகளுக்குப் போய்விட்டார்கள். அவர்கள் இருவரும் பதினைந்து வருஷங்களுக்குப் பின்னர் இரத்தினபுரிக்கு வந்தார்கள். பிரேமநாதம்பிரபுவுக்கும் அவரது மனைவிக்கும் சொந்தக்குழந்தை யில்லாவிட்டாலும் ஜகதீஸ்வரியையே அவர்கள் மிக அன்புடன் வளர்த்ததால் அவள் துர்மாணத்தை யடையவே அவர்களுடைய மனம் இவ்வுலக வாழ்க்கையில் ஒருவித வெறுப்பை அடைந்துவிட்டது. ஆகவே அவர்கள் அதிக ஆடம்பரங்களிலும் இன்பங்களிலும் கலந்துகொள்ளாமல் தங்கள் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்துத் தானதருமங்களைச் செய்வதிலேயே தங்கள் செல்வத்தையெல்லாம் செலவழித்தும் வந்தார்கள். திரண்ட செல்வம் படைத்தவர்களின் பெயர் சாதாரணமாய் ஏழைகளுக்குத் தெரியும் வழக்கமில்லை. ஆனால் நமது பிரேம

நாதம்பிரபுவின் பெயரைத் தெரியாத ஏழைகளே இரத்தின புரியில் இருக்கவில்லையென்று சொல்லிவிடலாம். அவர்கள் வீண்பெருமையும் ஆடம்பரமுமான எந்தக் காரியங்களுக்கும் பைசாவும் தாராமல் ஏழைமக்களின் உதவிக்காகவே தங்கள் பொருளைச் செலவழித்து வந்தார்கள்.

ஜகதீஸ்வரியின் பிரேத அடக்கத்தின்பின், அவளிடம் தணியாக் காதல்கொண்டிருந்த மதுரைநாயகம்பிரபு, இனி தான் யாரையும் நேசிக்கவோ, கலியாணம் செய்துகொள் ளவோ முடியாதென்றும், அப்பிரேதம் அடக்கம் செய்யப் பட்ட இடத்துக்கருகிலுள்ள பிரேமநாதரின் சமுத்திரக்கரை யோர பங்களாவில் வசிக்க அனுமதி கொடுத்தால் அங்கிருந்து கொண்டே தினசரி, ஜகதீஸ்வரியின் சமாதிக்குச் சென்று அதைப் பார்த்துவிட்டு ஒருவாறு மனச்சாந்தி யடையலா மென்றும் பிரேமநாதம்பிரபுவிடம் தெரிவித்தான். அதைக் கேட்ட அவர், அப்படியே செய்யலாமென்று சொல்லி அவ னுக்கு அங்கேயே வசிக்க அனுமதி தந்ததுடன் அம்மாளிகை யையும், அதைச் சுற்றிலுமுள்ள தன் சொத்துக்களையும் அவ னுக்கே எழுதி வைத்துவிட்டார்.

அவனும் தன் தகப்பனாரிடமிருந்து தனக்குக் கிடைத்த தையும் பிரேமநாதம்பிரபு அளித்ததையும் வைத்துக்கொண்டு எவ்வித வீண்செலவுகளை செய்யாமலும், நவீன நாகரிக வாழ்க்கையில் இறங்காமலும் பரிசுத்தமான பிரமசரிய வாழ்க் கையை நடத்திவந்தான். அவன் தினசரி காலை, மாலை வேளைகளில், ஜகதீஸ்வரி அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடத்துக்குச் சென்று அச்சமாதியின்முன் பணிந்து மணிக் கணக்காகக் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பான். அப்போது அவனுக்கும் தெரியாமல் அவன் கண்களிலிருந் தும் கண்ணீர் ஆறுயப் பெருகுவதை அங்கு நிற்கும் ஜனங்

கள் கண்டு ஏங்குவார்கள். அச்சமாதி அமைக்கப்பட்டிருக்கும் கோயில் அதிகாரிகளும் அவனை விரைவில் எழுந்து வெளியில் செல்லும்படி சொல்லாமல் அவனது பரிதாபநிலைமைக்காகப் பச்சாதாபப்பட்டு அக்கோயில் சாவியையே அவனிடம் கொடுத்துவிடுவதுமுண்டு. அவன் அடிக்கடி சில பவுன்களை அச்சமாதியின்மீது ஜகதீஸ்வரியின் ஆத்மா திருப்தியடைவதற்காக வைப்பான். அதை ஏதேனும் ஏழைகள் எடுத்துக்கொண்டுபோய்ச் சுகமாகக் காலங்கழிப்பார்கள்.

இவ்வாறாக மதுரைநாயகம்பிரபு அம்மாளிகையிலேயே காலங் கழித்துவந்தான். சிற்சில சமயங்களில் யாரேனும் சிறந்த சில பொறுக்கப்பட்ட நண்பர்களே வந்து அவனைக் காண்பார்கள். வேறு சில சமயங்களில் அவனது தந்தையின் இரண்டாவது மனைவியின் புத்திரிகளான கற்பகவல்லியும், கோமளவல்லியும் அவர்களுடைய கணவன்மார்களான செல்லப்பப்பிரபுவும், ஜகதீசன் என்னும் கேசவநாதனும் அங்கு வந்து அவனைப் பார்த்துவிட்டுப் போவார்கள். அவன் அவர்களுடனெல்லாம் மரியாதையாகவே நடந்துகொள்வான். அவர்களுக்குவேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்துகொடுப்பான். ஆனால் அவன் மட்டும் இவ்வுலக இன்பங்களையே துறந்துவிட்டுத் தனிவாழ்க்கையை நடத்துவான். பிரேமநாதம் பிரபுவும் அவரது மனைவியும் தேசசஞ்சாரம் செய்துவிட்டு இரத்தினபுரிக்குத் திரும்பிவந்தபிறகு சிலகாலத்துக்குப் பின்னர் ஒரேவருஷத்துக்குள் ஒருவர்பின் ஒருவராக இருவரும் இறந்துவிட்டார்கள். அவர்கள் தங்களுடைய ஆஸ்தியையெல்லாம் மிகப் பரிசுத்தவமானவனான மதுரைநாயகத்துக்கே எழுதி வைத்துவிட்டார்கள். அவனும் தான் வசிக்கும் மாளிகையைச் சுற்றிலுமுள்ள ஜனங்களெல்லாம் அவனை மதிப்புடன் நேசிக்கும்படியான வகையில் அவன் தன் வாழ்க்கையைப் பரோபகாரார்த்தமாக நடத்திவந்தான்.

ஜகதீஸ்வரி, தான் அடைக்கப்பட்டிருந்த மாளிகையின் மேல்மாடியிலிருந்து விழுந்ததும் அதைக்கண்ட பிரேமநாதம் முதலியோர் அம்மாளிகையில் சென்றூர்கள். அங்கே இள வாசர் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். இளவா சன், ஜகதீஸ்வரியின் சிறிய தாயாரின் கணவனுன பிரேம நாதம்பிரபு, அவளுடைய மனமார்ந்த காதலனுன மதுரை நாயகம்பிரபு ஆகிய இருவரின் பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தன் இரகசியத்தை வெளியிடக்கூடா தென்றும், தன் செயலுக்குத்தானே துக்கப்படுவதாகவும் கேட்டுக்கொண்டு அங்கு நடந்த விவரத்தையெல்லாம் சொல்லிவிட்டான். அவர்களும், இளவாசனைத் துன்புறுத் துவதனுலேயே இறந்துபோன ஜகதீஸ்வரி வரப்போகிற தில்லையென்பதையும் இளவாசன் தன்னுடைய அழகிய குமாரி இறப்பதற்குத் தானே காரணமாய் அமைந்ததைக் குறித்து எவ்வளவுதூரம் துயரப்படுகிறுன் என்பதையும் உணர்ந்து அதைப்பற்றி வெளியில் பகிரங்கப்படுத்துவ தில்லை யென்று முடிவுசெய்து விட்டார்கள். இதையெல்லாம் பார்த் துக்கொண்டிருந்த துப்பறியும் செல்வநாதனும், கேவலம் கண்ட பெண்களுடன் இன்பம் அனுபவிப்பதற்காக ஆசைப் பட்ட காமாதுரனுகிய இளவாசன், தனக்குப் பிறந்த பெண்ணை மரணத்துக் காளாக்கியதை அறிந்து அவனிடம் வெறுப்பும் அவமதிப்பும் கொள்ளலானுன். ஜகதீஸ்வரியின் பிரேதவிசாரணை நடைபெற்றதென்றுலும் ஏதோ ஒரு சமா தானத்தைச் சொல்லி எல்லாருமாகச் சேர்ந்து உண்மையை வெளிவிடாமல் மறைத்துவிட்டார்கள். உண்மையிலேயே இளவாசன், தன் அற்பசெயலைக்கண்டு மனமுடைந்தவனுய் அன்றுமுதல் தன் புத்தியில் மாறுதலடைந்து புதிய வாழ்க் கையை ஆரம்பித்துவிட்டான். ஜகதீஸ்வரியின் மரணம் மகா அயோக்கியனுன இளவாசனின் வாழ்க்கையில் புதிய மாறு தலை உண்டாக்கிவிட்டது.

ஜகதீஸ்வரியின் மரண சம்பந்தமான இரகசியத்தை மூடி வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் இளவாசனைப் போலவே அதில் சம்பந்தப்பட்ட மற்றவர்களின் விஷயமும் வெளியாகாமல் மறைந்துவிட்டது. ஆனால், அயோக்கியத் தனம் செய்தவர்களை இவ்வுலகமக்கள் தண்டிக்காமல் விட்டு விட்டாலும் எல்லாம்வல்ல இறைவன்மட்டும் அவர்களைத் தண்டிக்காமல் விடமாட்டான் என்பது நிச்சயம். நீதியை வழங்கவேண்டியது அவனுடைய கடமையல்லவா? அவ்வாறே ஜகதீஸ்வரியின் பரிதாப மரணத்துக்குக் காரணர்களான கௌரி, உலகாம்பாள், ஆட்கள் முதலியவர்களையும் இறைவன் சும்மாவிடவில்லை. உலகாம்பாள் சில தினங்களுக்குப் பின் ஒருநாள், ஜகதீஸ்வரி இறந்துபோன அதே மாளிகையில் தங்கி இருந்தபோது அன்றிரவு அவள், ஜகதீஸ்வரி பேய் உருவத்துடன் அவளை மிரட்டுவதுபோல் கனவுகண்டு தன் ஆட்களை எழுப்ப அவசரமாக ஓடுகையில் பெரிய கம்பத்தில் இடித்துக்கொண்டு மண்டை உடைந்து ஒன்றிரண்டு தினங்கள்வரை ஆஸ்பத்திரியில் அவஸ்தைப்பட்டு இறந்துவிட்டாள்.

அவள் இறந்துவிட்டதால் சேவகர்களுக்கு வேலை இல்லாமற்போகவே அவர்கள் கொள்ளைக்காரக் கூட்டத்துடன் சேர்ந்துகொண்டு கொலை, களவு முதலிய தீயகாரியங்களில் இறங்கியதால் இறுதியில் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டு மரணதண்டனை யடைந்து இவ்வுலகையே விட்டு நீத்தார்கள். கௌரியும், சதா பலவித கஷ்டங்களையே அடைந்துவந்தாள். இறுதியில் அவளுடைய வீட்டில் தீப் பற்றிக்கொண்டபடியால் வேறு தெருவில் மற்றொருவீட்டை வாங்கி அதில் குடியிருந்துவந்தாள். அந்த வீட்டிலும் அவள் தன் பழைய வழக்கப்படியே பல கள்ளக்காதலர்கள் கூடுவ

தற்குச் சௌகரியத்தை அளித்துவந்தாள். இப்படி இருந்து வரும்நாளில் அன்னிய நாட்டானொருவன் அவ்வீட்டில் இறந்துவிட்டதால் அது சம்பந்தமாய்க் கைதுசெய்யப்பட்ட சிலரில் அவ்வீட்டின் சொந்தக்காரியாகிய கௌரியும் ஒருத்தி. அவளை விசாரணை முடியும்வரை சிறையில் வைத்துவிட்டபடியாலும், அவள் அப்போதுதான் முதல்முறையாகச் சிறை சென்றவளாதலாலும் அவளுக்கு சிறை ஜுரம் ஏற்பட்டு அதில் அவள் இறந்துவிட்டாள்.

கபூர் கிருஷ்ணன் இளவரசனுடைய துணையால் ஜய தேவியின் குமாரியாகிய பத்மாட்சியை மணந்துகொண்டு சுகமாக வாழ்ந்துவருகையில் அத்தம்பதிகளுக்குப் பல குழந்தைகளும் பிறந்துவிட்டன. அக்குழந்தைகளெல்லாம் கபூர் கிருஷ்ணனுடைய சாயலாகவே இருந்தனவென்றாலும் மூத்த குழந்தை மட்டும் இளவரசனுடைய சாயலாகவே இருந்தது. அதன்காரணம் நேயர்களறிந்த விஷயமேயாகும். சாதாரண எளிய குடும்பத்தில் அரசகுடும்ப சம்பந்தம் ஏற்பட்டதன் அறிகுறியாக அவ்வாறு ஒருபையன் இருந்ததையும் அந்நகரவாசிகள் பெருமையாகவே பேசிக்கொண்டார்கள். ஆயினும் யாரேனும் அதைப்பற்றி அவன் எதிரில் பேசிவிட்டால் அப்போது அவன் அதை மறக்கும்பொருட்டு ஒரு பெரிய டம்ளர் நிறைய மதுபானத்தை ஊற்றிக்கொண்டு மனதார அருந்தி விட்டுப் பெருமையுடன் உட்கார்ந்திருப்பான். ஆனால் அவன் மனைவியோ உண்மையில் வருத்தப்படுவாளென்றாலும் தன் தலைவிதியையும், தன்னைப் பெற்றெடுத்த தாயின் கொடுமையையும் நினைத்து வருந்துவாள்.

மதனவல்லி என்னும் கற்பகவல்லியின் சிறிய தாயாரும், சுகானந்த குருவால் பல தொல்லைகளை யடைந்தவளுமான லீலாவதி அத்தொல்லையைப் பொறுக்கமுடியாமல் சுகா

னந்த குருவை நாம் இதற்குமுன் விவரித்திருக்கிறபடி, மலை யின் உச்சியிலிருந்து தள்ளிக் கொலை செய்துவிட்டபிறகு சுமார் நான்கு ஐந்து வருஷங்கள்வரை பல தேசங்களிலும் சுற்றித் திரிந்துகொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு இரத்தினபுரியிலுள்ள பல நண்பர்களும், மூத்த சகோதரி யான சுந்தரம்மாளும், அவள் அப்போதைக்கப்போது அறி விக்கும் விலாசத்துக்குப் பணம் அனுப்பிவந்தார்கள். ஆனால் பிறகு அவள் தன் சொந்ததேசம் திரும்பவேண்டுமென்று ஆவல்கொண்டு திரும்பினாள். ஆயினும் வழியிலேயே திடீ ரென்று ஜுரம் கண்டு அவள் இறந்துவிட்டாள்.

இக்கதையில் துப்பறியவேண்டிய சந்தர்ப்பங்களிலெல் லாம் மிகத் திறமையுடன் வேலைசெய்து பேரும் புகழும் பெற்ற செல்வநாதன் பல வருஷங்கள்வரை துப்பறியும் பிர தம உத்தியோகஸ்தராயிருந்து கடைசியில் ஓய்வெடுத்துக் கொண்டு இரத்தினபுரிக்கு அருகிலுள்ள ஒரு ஊரில் தன் மனைவியுடன் சுகமாகக் காலங்கழித்துவந்தான். அப்போ தும் தனிப்பட்டவர்களுக்கு ஏற்படும் சங்கடங்களில் அவன் தன் சாமர்த்தியத்தையும் அறிவையும் உபயோகப்படுத்திப் பலருக்கும் துணைபுரிந்துவந்தான்.

கர்னல் மாரப்பனுடைய மனைவியைப்பற்றி நேயர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். ஏனெனின், அவள் ஒருநாள் இரவு அரசமாளிகைக்கு வந்து தற்செயலாக இளவரசன் கையில் சிக்கிக்கொண்டு அவனுடைய ஆசை யைத் தீர்த்துக்கொள்வதற்கு அவள் இடம் தந்ததைப்பற்றி முன்னமே பிரஸ்தாபிக்கிறோம். ஆதலின் அவளுடைய நிலைமை யாதாயிற்று என்று தெரிந்துகொள்ளவேண்டாமா? கர்னல் மாரப்பன் பரிதிபுரத்துக்கருகில் ஏரிக்கரையில் அவ னுடைய காதலியாகிய ஏகநாயகிச்சீமாட்டியால் கொலைசெய்

யப்பட்டு இறந்துவிட்டபடியால் அதை அறிந்த அவனது மனைவி அங்கு சென்று நடக்கவேண்டிய காரியங்களைக் கவனித்துவிட்டுவந்தாள். பிறகு அவள் இரத்தினபுரிக்குத் திரும்பி வந்ததும் இளவயதினளாகையால் அந்நகரில் பிரபலமான ஒரு கனவானை அவனது அழகையும் செல்வத்தையும் கண்டு மோகித்துக் கலியாணம் செய்துகொண்டு அவனுடன் வாழ ஆரம்பித்தாள். அவளைக் கலியாணம் செய்துகொண்டதன் பலனாக அக்கனவான் அடுத்தவருஷமே இரத்தினபுரி நகர முனிசிபல் சபையின் தலைவர் பதவியைப்பெற்றான். அவளும் அவனுக்கு அதிக உதவியாக இருந்தாள். அப்படியிருக்கும்போது அம்முனிசிபல் சபையார் இளவரசருக்கு ஒரு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது முனிசிபல் சபைத்தலைவருடன் அவரது மனைவியும் வந்திருந்தாள். இளவரசர் எல்லாருடைய கைகளையும் குலுக்கியபோது அவளுடைய கையையும் குலுக்கினான். அச்சமயத்தில் அவள் மனதில் தான் ஒருநாள் இரவு இளவரசருடைய படுக்கைத் துணைவியாயிருந்த சம்பவம் ஞாபகத்துக்குவந்தது. எனினும் அதை அவள் மறந்து, நகரசபையின் தலைவருக்கு ஏற்ற மனைவியாக இருந்து குடும்ப வாழ்க்கையைச் சரிவர நடத்தி நல்ல பெயர்பெற்றாள்.

லேவாதேவி வர்த்தகம் செய்து இறுதியில் மரணதண்டனை பெற்று தூக்குமேடையில் இறந்த வேலப்பனின் மனைவியும், குமாரியும் ஆழ்ந்த வறுமையில் அகப்பட்டுக்கொண்டு மிகக் கஷ்டப்பட்டார்கள். வேலப்பன் பணக்காரனாய் இருந்தபோது அவனுக்குத் தெரிந்த பலருக்கும் அவர்கள் கடிதம் எழுதித் தங்களுக்கு ஏதேனும் உதவிசெய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் இறைவன் கிருபையால் நல்ல செல்வம்பெற்றுச் சௌகரியமாக இருந்தபோது, எந்த

நிமிஷத்திலும் அச்செல்வம் மறைந்துபோய் ஏழ்மைத் தனத்தை யடையலாமென்பதை அறியாமல் அதிக கர்வத்துடன் வாழ்க்கை நடத்தி, ஏழை எளியாரை எல்லாம் மிகக் கேவலமாக நடத்தியதால் அவர்களுக்கு இப்போது யாரும் அனுதாபங்காட்டி உதவிசெய்ய முன்வரவில்லை. ஆகவே அவர்கள் ஊசிவேலை செய்து அந்த உழைப்பினால் கிடைக்கும் வருவாயைக்கொண்டு காலங்கழிக்கவேண்டியதாயிற்று. ஆனால் சில வருஷங்களுக்குப் பின்னர், வேலப்பனிடம் முன்பு குமஸ்தாவாக இருந்த உத்தமகுணசீலனான விசுவநாதன் அவர்கள் வசிக்கும் இடத்துக்கு வந்து அவர்களுடைய பரிதாபமான நிலைமையை அறிந்துகொண்டு மிகவும் விசனப்பட்டு அனுதாபங்காட்டித் தன் நிலைமைகளையெல்லாம் சொல்லிக்கொண்டு அவர்களுக்கு அப்போதே நூறு பவுன் சன்மானம் செய்ததுடன் பிறகு வருஷவாரி ஐம்பது பவுன் அனுப்பி வருவதாகவும் வாக்களித்துவிட்டு உடனே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

விசுவநாதன் தான் விரும்பியபடியே மீனும்பாள் என்னும் உத்தமியை மணந்துகொண்டு இரத்தினபுரியிலேயே பெரிய மாளிகையை வாங்கி அங்கு தன் மனைவியுடன் வசிக்க ஆரம்பித்தான். அவன் பரிதிபுரத்தில் இரத்தினபுரி கம்பெனியின் கிளையொன்றில் மானேஜராக இருந்தபோதே லட்சுமி கடாட்சம் கிடைத்துவிட்டபடியால் பெருந்தொகையைச் சேர்த்துவிட்டதுடன் மீனும்பாளைக் கலியாணம் செய்துகொண்டதும் அதே கம்பெனியின் ஒரு பாகஸ்தனாகிவிட்டான். அவன் பல தானதர்மங்களையும் செய்து கண்ணியமாக வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தபடியால் எல்லாரும் அவனைப் பெருமையாகவே பாராட்டி வந்தார்கள். அவன் இனிய கணவனாகவும், சிறந்த தந்தையாகவும் விளங்

கினன். மீனம்பாளும், மக்களைச் சரியானவழியில் போஷிப்ப தில் சிறந்தவள் என்னும் பெயர்பெற்றுக் கணவனுக்கேற்ற மனைவியாக நடந்து கீர்த்தியுடன் விளங்கினள். விசுவநாதன் அப்போதைக் கப்போது, முன்பு வேலப்பன் தூக்கு மேடை யில் ஏறுவதற்குத்தானே காரணமாயிருந்ததை நினைத்து வருந்தினுனென்றாலும், கடைசியில் திக்கற்றுப்போன அவ னது மனைவிக்கும் மக்களுக்கும் தான் உதவிசெய்வதே தனது காரியத்துக்கு ஒரு பிராயச்சித்தமாக நினைத்துத் திருப்தியடைந்தான்.

செல்லப்பப்பிரபுவும் அவாது மனைவியான மதனவல்லி யும், தாங்கள் இரத்தினபுரி இளவரசரின் மாளிகையை விட்டு வெளியேறியபோது திடம் செய்துகொண்டதேபோல் பின் னர் அம்மாளிகைக்குச் செல்லாமலும், ஆடம்பரமானதும் பரிசுத்தமற்றதுமான வாழ்க்கை முறையில் இறங்காமலும், இனிய குடும்பவாழ்வை நடத்த ஆரம்பித்தார்கள். கண்ட ஆசாமிகளையெல்லாம் தங்கள் விட்டில் சேர்த்துக்கொள்ளாத தால் செல்லப்பப்பிரபுவோ அல்லது மதனவல்லியோ தவ றுனவழியில் செல்லக் காரணமில்லாமலிருந்தது. மேலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுக் கடந்துபோன விஷயத்தைப்பற்றி ஞாபகத்துக்குக் கொண்டுவாாமல் அதை அடியோடு மறந்து புதிய தம்பதிகளைப்போல் பாஸ்பாம் அன் புடன் நடந்துகொண்டார்கள். அவர்கள் இருவருமே கோமளவல்லி, மீனம்பாள் ஆகியவர்களிடமும், அவர்களது மக்களிடமும் அபிமானமுடையவர்களா யிருந்தார்கள். மதனவல்லி இளவரசர் மாளிகையைவிட்டு வந்தபின்னர் அவ னைக் கண்ணாலும் பார்க்கவில்லை. ஆனல் ஆரம்பத்தில் சில காலம் அவன் அவளுக்குப் பல கடிதங்களை எழுதினன். அதற்கெல்லாம் செல்லப்பப்பிரபுவே பதிலளித்தான்.

அதேவீட்டில் கோமளவல்லியும் அவளது கணவனாகிய ஜகதீசன் என்னும் மாறுபெயர் வைத்துக்கொண்டிருந்த கேசவநாதனும் அதிக இன்பத்துடன் காலங்கழித்தார்கள். அவர்களைப்போல குடும்பவாழ்க்கையில் இன்பத்தைக் கண்டவர்கள் யாருமில்லையென்றே சொல்லலாம். அவர்களிருவரும் ஆதிமுதலே பரஸ்பரம் அதிக அன்புடன் இருந்தார்கள். ஜகதீசன் வேறு எந்தப் பெண்ணையும் கண்டு மோகித்ததில்லை. அவ்வாறே கோமளவல்லியும் எந்த ஆடவனைக் கண்டும் காதலித்ததில்லை. இருவருடைய கற்புக்கும் ஏற்ற சன்மானத்தையே அவர்கள் பெற்றார்கள். அவர்களுடைய பிற்கால வாழ்க்கையில் வருத்தம் உண்டாக்கக்கூடிய எத்தகைய சம்பவமுமே நடைபெறவில்லை. இனிய குணாதிசயங்களுடைய மகளைப்பெற்று இவ்வுலகமே தெய்வலோகமோ என்னும்படி தங்கள் வாழ்க்கையை இன்பமாக நடத்தினார்கள்.

இதற்கிடையில் கற்பகவல்லி, கோமளவல்லி, மீனாம்பாள் ஆகிய மூவரும் அருகிலிருந்து சிஷ்ருஷைசெய்ய அவற்றை அனுபவித்துக்கொண்டு சுகமாகச் சிறிதும் மனக்கவலையின்றி அவர்களுடைய பெரிய தாயாராகிய சுந்தரம்மாள் இறந்து போனாள்.

சர்தார் சூரியநாயகம்பிரபுவும், மதனவல்லியைப்போலவே, அவளிடம் வாக்குறுதி யளித்தபடியே, தன் வாழ்க்கையில் புதிய மாறுதலை ஏற்படுத்திக்கொண்டு, கலியாணமின்றிக் கண்டவருடன் கூடிக்குலவி வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாமல் குணாதிசயங்களில் சிறந்த அமிர்தம்மாளை விவாகம் செய்துகொண்டு ஒழுக்கத்துடன் குடும்பத்தை நடத்தி வந்தான். அவளும் பிரபுவுக்கேற்ப நடந்துகொண்டு மனைவியை மணந்து குடும்பவாழ்க்கையை நடத்துவதே உத்தம வாழ்க்கை என்று அப்பிரபு உணரும்படி செய்தாள். அவர்களுக்கும் அழகிய குழந்தைகள் பிறந்தன.

இவ்வாறு நாம் நமது இந்த இரத்தினபுரி இரகசியத்தின் இரண்டாவது கதையை முறையே மூன்றாவது பாகம் முதல் இந்த ஆறுவது பாகம் உள்பட நான்குபாகங்களில் முடித்து விட்டோம். இதில் பல நண்பர்கள், இளவரசரின் மனைவிக்கு இன்னும் என்னகஷ்டங்கள் நேர்ந்தன. அவள்கதி என்ன ஆயிற்று என்று தெரிந்துகொள்ள விரும்பலாம். ஆயினும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. பெரிய இடங்களில் நடைபெறும் இரகசியங்களை விளக்குவதற்காகவே இது எழுதப்பட்டதாதலின் இளவரசனுடைய நடத்தை விவரிக்கப் பட்டுவிட்டது. இனி இரத்தினபுரி இரகசியத்தின் மூன்றாவது கதையை அடுத்த பாகங்களில் வாசிப்பதனால் இதுபோன்ற இன்னும் பெரிய திடுக்கிடக்கூடிய சம்பவங்களை வாசித்து இன்புறலாம். நேயர்கள் இதிலுள்ள படிப்பினைகளை அறிந்து கொள்வார்களாக.

ஓம். தத்-சத்.

18656

"ஆனந்தபோதினி" அச்சுக்கூடம், சென்னை.